புதினபத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

(1889)

# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

| பத்திரக் கிரயம் | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ௵ 1-க்கு ரூ. | 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, ரூ. | 9-40 |
| சோவியாப்பகுதி: ,, ரூ. | 9-40 |
| தனிப்பிரதி: சதம் | 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

| விளம்பர விகிதம். | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | காற்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு மேல் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௬௭ } யாழ்ப்பாணம்:—குரோதன௵ ஆவணி௴ ௨௯௨; (1925 செப்டெம்பர் 14) திங்கட்கிழமை. { இலக்கம்—௨௧

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேறு
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தேசப்பெரியார்கள்
அநேகர் விரும்பி உபயோகிக்கும்
சமையல் அடுப்பு

### ருக்மணிகுக்கர் தான்.

கனம் செட்டியாபுரம், ராஜா, டாக்டர் வாதராஜுலுநாயுடு முதலிய அநேக கனவான்களால் கன்குமதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒருமணிக்குள் கஷ்டமில்லாமல் சாதம் 4, 5 பதார்த்த வகைகள் செய்யலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அளவு | ஒருவர் | 2 | 4 | 6 | 8 பேர். |
| விலை | ரூபா | 13. | 18 | 22 | 27 33. |

விபர புத்தகம் இனாம். ஏஜண்டுகள் தேவை.
இன்றே ஒரு குக்கர் வாங்குங்கள்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
இராயபுரம், மதராஸ்.
(Y. 45.)

## Hakeem, M. Mohamed Ebraheem & Co;
HAMEETHIA AYURVEDIC UNANI
MEDICAL HALL.
POTO-NOvO (South India)

அருமைத் துரைகளே! பொறுமையாய்க் கவனியுங்கள்!
இழந்துபோன பலத்தையும், நலத்தையும், நரம்புத் திடத்தையும்
அதி அற்புத ஆச்சரியமான சுக சக்தியையும் இது
உபயோகித்த ஒரே வேளையில் தெரிந்துகொள்ளலாம்.
ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிக் கடிதங்களும்
தங்க மெடல்களும் பரிசு பெற்ற
மதன மோஹன
...டுக் குரு...த்தின் லேகியம்.

அசல் பாகம்! —0— அருமையானது!!

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதமுள்ளது. இந்தப் பாகம் சரியாக வேறு எந்தக் கம்பெனியார்களும் செய்து காட்டினாலும் அல்லது இது நாங்கள் உண்மையான பாகப்பிரகாரம் சரியாக செய்யவில்லை என்று ருஜுவித்தாலும் சரியே அவர்களுக்கு எங்கள் கம்பெனியால் ரூபா 1000 இனாம் கொடுக்கப்படும்.

அன்பின் மிக்குள நண்ப சிகாமணிகளே!

அருமையும், அனுபவமும், பெருமையும், பிரபல்யமும், மஹா அற்புத ஆச்சரிய சக்திகளும் வாய்ந்த இந்த அசல் "முபற்ரு" லேகியத்தை உபயோகிக்கும் உத்தமர்கள் இல்வாழ்க்கையிலே நாம் என்றுங் கண்டிராத சித்தானந்த பேரின்ப சிற்சுகவிலாச நலன்களையும், சில அற்புத குணங்களையும் தெரிந்துகொள்வார்கள். ஆஹா! குணத்தால் சிறந்த இந்திரலோஹத்திய "மகாசஞ்சீவினி" இதுதானோ? என்றும் பன்முறையும் புகழ்வார்கள். ஆனால் பிறந்து இவ்வுலகத்தில் வளர்ந்து இளம் பால்யப் பருவத்திலேயே குருநோய்வாய்ப்பட்டுக் கெட்டும், இன்னும் பலவித காரணங்களினாலும் தேறைத்திற்கு சந்தானமாகிய நல்வீரத்தைத்தை வீண்விரயஞ்செய்தும், நல்ல வாலிபப் பருவத்தில் வாத பித்த சிலேற்பன மிகுதிக் குறைவாலும், எலும்புருக்கி முதலான வெப்புரோகங்களினாலும் ஜீவரத்ன பீடமாகிய தேகம் தளரப்பெற்றவர்களும், சுத்திராபங்கம் என்னும் ஓர்வித கொடிய நோயினால் எப்பொழுதுஞ் சஞ்சலப்பட்டுக்கொண்டிருப்பவர்களும், சுரம் பிரமேகம் விஷப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தம் கரைந்து சர்வ நாம்புகளுந் தளர்ந்து ஐம்புலன்களின் உற்சாகமும் குறைந்து, ஞாபகசக்திக் குறைவு, கை கால் அசதி, தேஹகாங்கை, இடுப்புவலி, பசிமந்தம், மலச்சிக்கல் முதலிய வியாதிகளால் சதா வருந்துவோரும்,

மனோ தத்வ புத்திசாதுர்யத்தைக் கொண்டு வேலைசெய்யக்கூடிய லாயர்கள், குமாஸ்தாக்கள், பாடலீசர்களும், மற்றும் ஞாபகசக்தியால் வேலையையுடைய, எந்தத் தொழிலாளர்களும் இதனை உபயோகித்தால் நல்ல உற்சாகமும், சந்தோஷமும் அடைவார்கள். திடமான தேஹக் கட்டுப்பாட்டையும், புதிய மேனியையும், இரத்தவிர்த்தி ஞாபகவிர்த்தி சந்தானவிர்த்தி முதலிய சர்வ நலன்களையும் பெறுவார்கள். தாருட்பசக்தியின் குறைபாட்டினால் ஏற்பட்ட பலவிதமான நோய்களினாலும், பீடிக்கப்பட்டு இரவும் பகலும் அதுவே கவலையிலானவர்களுக்கு திட்டமாக குணம் செய்வதில் இது மகா வல்லமையும் பெரும் பிறகீர்த்தியும் பெற்றது. இதனை பரிக்ஷிக்கும் ஒவ்வொரு நண்பர்களுக்கும் தப்பாமல் குணமசெய்யும். சத்தியமான சித்தானந்த யோகபாகம் இதுதான் என்று நாம சொல்லவேண்டியதில்லை. பலனும் நலனும் சில அற்புத ஆச்சரிய வல்லமெய்க் குணங்களும் ஒரே வேளையில் தெரியும். கண்டாலே தெரியும் காக்ஷி! தின்றாலே தெரியும் திடன்!! இத்தகைய குணங்கள் இதில் இல்லையென்று சத்தியமாகச் சொல்லுகிறவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபா 1000 இனாம் கொடுக்கப்படும். பரிக்ஷை செய்யவும். உபயோக விபரம் கூடவே வரும்.

அன்பர்களுக்கோர் அறிவிப்பு:—

இக்காலத்தில் சில போலி வைத்தியர்கள் விளம்பி பலவித இமிடேஷன் லேகியங்களையே டை சிட்டுக்குருவி லேகியமென்று விற்று வருகிறார்கள். ஆகையால் அத்தகைய லேகியங்களைத் தருவித்து மோசம்போய்விடாமல் நமது விலாசத்தைக் கவனித்து எழுதவேண்டியது. ஷை முழுபாகம் தருவிப்பவர்களுக்கு உசித இரசமணி 1 இனாம்.

| | |
|---|---|
| 40 நாள் மருந்து 16 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 10—0—0 |
| 20 நாள் மருந்து 8 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 5—0—0 |
| பரிக்ஷைக்கு 10 நாள் மருந்து 4 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 3—0—0 |

வி. பி தபால்செலவு முதலியன முழுபாகத்திற்கு அணா 12ம், அரைபாகத்திற்கு அணா 7ம், கால்பாகத்திற்கு அணா 5ம் பிரத்தியேகம். மருந்தின் கிரயத்தை முன்பணமாக அனுப்புகிறவர்களுக்கு போஸ்டேஜ் சார்ஜ் இனாம்.

ஷை கவனிப்பு:—பினாங்கு, சிங்கப்பூர், குவாலாலம்பூர், செட்டால், மோரீஸ் முதலிய வெளிப்பிரதேசங்களில் உள்ளவர்கள் மருந்தின் கிரயமும், தபால் செலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணமாக மணியார்டர் அல்லது போஸ்டல் ஆர்டராக அனுப்பியே மருந்து பெறவேண்டும்.

நமது விலாசம்:—

ஹக்கீம், எம். முஹம்மது இபுருஹீம் அன்ட் கம்பெனி,
மானேஜர், ஏ. முகம்மது யூசுபு,
ஹமீதியா ஆயுர்வேத யூநானி வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை (தென்னிந்தியா).
(Q 63).

அநேக பரிசுகளும் தங்கமெடல்களும் நற்சாக்ஷிகளும் பெற்று உலகப் பிரசித்தி அடைந்திருப்பதோடு 25-8-23-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் அண்டிமருந்துக் கண்காட்சியில் இவர் மருந்துக்கள் பஸ்ட்கிளாஸ் (முதல்தர) தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்தியபதி என்ற பட்டமும் பெற்றவர்.

குஷ்ட ரோகிகளே!

நீங்கள் இனி இந்த நாக வேதனையில் அழுந்தாமல் மன உல்லாசமாக இருக்கலாம்.
பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

## நமது தாம்பிர பஸ்பத்தின் மகத்துவம்.

டாக்டர்களைக் கைவிடப்பட்ட அநேக குஷ்டரோகிகளை சௌக்கியப் படுத்தி விட்டது.

திமிருடன் உள்ள குஷ்டம், குறைநோய், தடிப்பு, அரிப்பு, கை கால் சுரணையற்று காது, மூக்கு, உதடு, கை கால் சுரணையுள்ள பெருநோய் உள்ளவர்களும் கண்சிவந்து வாய் மூக்கில் துர்வாடை வீசும் மூக்கு அழுகிய அசாத்திய ரோகமுடையவர்களும் சரீரமே ரணமாகி விரல்கள் அழுகிப்போன ஆறாத ரணங்களும், வெள்ளை, வெட்டை, மொழிகளில் குலை, வீக்கம், வலி கை கால் குடைச்சல், கிரந்தி, கணைச்சல், மேகநால், பத்து, அக்கிரந்தி, தடிப்பும நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேகவியாதிகளும், வெண்மேகம், செம்மேகம், கருமேகம் முதலிய சகலவித சர்ம வியாதிகளுக்கும்,

# நமது தாம்பிர பஸ்பம்.

சாப்பிடுங்கள்.

முப்புவினால் தருக்கற நீற்றியது; களிம்பற்றது; வாந்தி முதலிய கேடுதிகள் ஒன்றும் செய்யாது பத்தியமில்லை. வியாதிகளை விவரமாய் எழுதவும்.

80-வேளை பஸ்பம் ரூபா 40. 40-வேளை பஸ்பம் ரூபா 20.
20-வேளை ரூபா 10 ஏழைகள் என்று எழுதினால் பாதிவிலைக்கு அனுப்பப்படும்.

காந்தி! தேஜஸ்!! பலம்!!! தீர்க்காயுள் சந்தானவிர்த்தி,
அடையப் பிரியப்படுகிறீர்களா! அப்படியானால் பழனி, T. R. K.

# தங்கபஸ்பம். சாப்பிடுங்கள் (பஸ்பத்தின் மகிமை).

"முடியாத பற்பமது குன்றியுண்ண முனையான காயமது சிவந்து மின்னும்
பிடியாத மதயானைப் பெலனுக்கொக்கும் ..............."

என்ற இக்கவியால் பஸ்பத்தின் பெருமை நன்கு விளங்கும் அபார சக்தி வாய்ந்தது. ஜீரண சக்தி, பசி, இரத்தவிர்த்தி உண்டாக்கும். இந்திரிய விருத்தியும் இந்திரிய புஷ்டியும் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை.

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

100-நாள் பஸ்பம் ரூபா 35. 50-நாள் பஸ்பம் ரூபா 20. 25-நாள் பஸ்பம் ரூபா 10., 10நாள் ரூ 5.

## நீரழிவுக்கு ஆப்ரேக் செந்தூரம்.

சாஸ்திபோகும் நீரை நிறுத்தும், தாகத்தைக் குறைக்கும், நீரிலுள்ள சர்க்கரையையும்சரீர வெளுப்பையும் மாற்றி தேஜஸ் பலம் உண்டாக்கும். இதோ ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதி இந்தமருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. இப்படி சிரேஷ்டமான மருந்து இதுவரை வெளிவரவில்லை.

40-நாள் மருந்து ரூ 20, 20-நாளுக்கு ரூ 10. அனுமான ஆவரை கிருதம் 80 உருண்டை ரூ 10.

## தாளக பஸ்பம்.

எவ்வளவு நாட்பட்ட காசம் க்ஷயம், ஈளை, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு அவசியம் தீரும். புட்டி ரூபா 4.

## நாக பஸ்பம்.

சீழ் மூலம், ரத்தமூலம், மூலமுளை, மல்பந்தம் முதலிய மூலம் ஒன்பதும் வெகு சீக்கிரம் குணமாகும். ஆப்ரேஷன் தேவையில்லை புட்டி ரூபா 4.

## பிரமேக நிவாரணி.

ஒரேவேளையில் உங்கள் கஷ்டத்தை நிவிர்த்தி செய்யும், பொறுக்கமுடியாத வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தாதுமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

## இதோ? ரசமணி.

ஆசைக்குகந்தது வாசிதம்பிக்கும் சகலவசியம், தனலாபம், கீர்த்தி, நினைத்தகாரியசித்தி, தொழில்விருத்தி, புத்திரசந்தானம், மென்மேலும் பெருகும், சொத்துநோய் அகமிருந்து மேகபடறு, சொறி சிரங்கு முதலியவை தீரும். மணி 1-க்கு ரூபா 2. 6-மணி ரூபா 10-0:0.

எந்த மருந்துக்கு ஆர்டர் செய்தாலும் கடிதம் எழுதும்போது விவரமாய் நிரேக குறிகளைத் தெரிவிக்கவும், பினாங்கு, சிங்கப்பூர்த்தேசவாசிகள் முன்பணம் அனுப்பவும்.

வைத்தியபதி, டி. ஆர். கருப்பணபிள்ளை,
ஆயுள்வேத வைத்தியசாலை, பழனி.

(Q 56 A.)

### ஆப்ரேஷன் இல்லாமலே சுலபமாய் நிவர்த்தியாய்விட்டது.

கேஸரியின் விலையுயர்ந்த ஔஷதங்களின் குணத்தை மிகவும் மெச்சினேன் 'லோத்ரா' வைப்பற்றி என் அனுபவத்தைக்கீழேகுறிப்பிடுகின்றேன். அதற்குச்சமமான ஔஷதம் பூலோகத்தில் வேறெதுவுமில்லையென்றுதிண்ணமாய்க் கூறுவேன். என்மனைவிக்கு வயிற்றில் இடதுபாகத்தில் ஒருவிதமான வலி இருந்து வந்தது மேனாட்டு (இங்கிலீஷ்) வைத்தியம் எல்லாம் பிரயத்தனப்பட்டுக் குணமடையவில்லை. பின் ராஜமந்திரி ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்போனதில் உடனே கர்ப்பபையில் சாஸ்திர சிகிச்சைசெய்யவேண்டுமென்றார்கள். இது என் மனைவிக்குச் சம்மதமில்லாததால் பெருங்கஷ்டத்துடன் ஊர் வந்துசேரும் தருணத்தில் வரப்பிரசாதிபோல் "லோத்ரா" வியாபகத்திற்கு வந்ததால் செல்லைகளு ஆபரேஷனுக்கு வருமுன் இதை உபயோகித்துப் பார்க்க எண்ணங் கொண்டவளாய் தந்தி மூலமாய் ஆடர் கொடுத்து ஔஷதத்தை தருவித்துக்கொண்டு முதல்வேளை மருந்து கொடுத்த மாத்திரத்திலேயே குணம் காண ஆரம்பித்தது இரண்டாம் வேளை மருந்து கொடுத்தவுடன் 8-மணிநேரம் நல்ல நித்திரைசெய்தாள். மறுபடி மூன்றாம்வேளை மருந்து மறுநாள் கொடுத்த மாத்திரத்தில் வலியெல்லாம நின்றுவிட்டது. நாலுக்கு நாள் சுகமடைந்து வந்தாள். சத்தியமாய் "லோத்திரா" வினால் ஆபரேஷனில் தான் நிவிர்த்தியாக வேணுமென்று இங்கிலீஷ் டாக்டர்கள் சொன்னவியாதி ஆபரேஷன் இல்லாமலே சுலபமாய் நிவர்த்தியாய் விட்டது என்று காக்கினாட, கோதாவரி டிஸ்டிரிக்டு போர்ட் இஞ்சினியர் ஆபீஸ், மகா-ா-ா-ஸ்ரீ பி. சுப்பராயுடு அவர்கள் எழுதுகிறார்.

இந்த ஔஷதத்தைப் பற்றிய புத்தகத்திற்கு உடனே எழுதுங்கள்.

"கேசரி குடீரம்"
ஆயுர்வேத ஔஷதசாலை,
எழும்பூர், சென்னை.

Y 85 B)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதன௵ ஆனி௴ ௨0௳ திங்கட்கிழமை

## மழையின்மை.

"விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது".

யாழ்ப்பாணத்திலே மழைபெய்து ஆறு மாசங்களாய்விட்டன. சென்ற சித்திரை மாசத்தின் பின் இங்கே இரண்டு மூன்று முறை சிறு மழை தூறியதேயன்றிப் போதிய மழை பெய்யவில்லை. இப்பொழுது நிலத்திலே பசிய புல்லைக் காண்டல் அரிதாய்விட்டது. தென்னை பலா மா முதலிய பெரு விருட்சங்களும் நெடுங்காலம் மழையின்மையினால் வாடத் தலைப்பட்டன. கிணறுகளிலுள்ள நீர்வளமுங் குறையத் தொடங்கிவிட்டது. வெய்யில் உஷ்ணமோ பொறுக்க முடியாது. குளிரோடு கூடிய கச்சுக்காற்று இடையிடையே வீசுகின்றது. மரஞ் செடி வீடு வாசல் முதலிய எவற்றைப் பார்த்தாலும் புழுதிப் படலத்தால் மூடுண்டபடியே காணப்படுகின்றன. பெருமழை பெய்ய வேண்டிய இக்காலத்திலே புழுதிமழையே பெய்கின்றது. ஊரிலே பலவகையான ரோகங்களும் பரவியிருக்கின்றன. கமக்காரர் எல்லாரும் விதைமழையை எதிர்பார்த்திருக்கின்றனர். விதைமழை பெய்யவில்லை. சிலர் தங்கள் வயலிற் புழுதி விதையிட்டனர். பலர் செய்வதின்னதென வறியாதவராயிருக்கின்றனர்.

"நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்".

என்றபிரகாரம் மழையில்லையாயின் சத்த சமுத்திரமும் தத்தம் நீர்வளங் குறையுமென்றால் மற்றையவைகளைப்பற்றிக் கேட்பானேன்!

மழையை மனுஷன் தன்னுடைய தான தருமச் செயல்களினால் வருவிக்க முடியுமேயன்றி வேறு எவ்வகையானும் வருவித்தல் முடியாது. "நான் எல்லாவற்றையும் ஆக்குவேன்; என்னால் ஆகாததொன்றில்லை; இவைகளெல்லாம் என்னாலல்லவா நடைபெறுகின்றன" என்ற வீணெண்ணத்தினால் மனுஷன் தருக்குறும்போது சர்வலோகநாயகராகிய கடவுள், இவன் கொண்டுள்ள தருக்கு ஆதாரமற்றதென்பதைக் காட்டி இவனுக்கு நல்லறிவை யூட்டி இவனையீடேற்றும் வண்ணம் மழையைப் பெய்யாது தடுத்துவிடுகின்றனரென்றே நாம் கொள்ளுதல்வேண்டும். உலகத்திலே தருமங் குன்றி அதர்மந் தலைகாட்டும்போது இறைவன் மழையை இல்லாது செய்துவிடுகின்றான்.

"வேத மோதிய வேதியர்க் கோர்மழை
நீதி மன்னர் நெறியினுக் கோர்மழை
மாதர் மங்கையர் கற்பினுக் கோர்மழை
மாதம் மூன்று மழையெனப் பெய்யுமே".

என ஆன்றோர் கூறியபிரகாரம் பிராமணர்கள் செய்துவரும் யாகாதிகருமங்கள் காரணமாகவும் அரசினர் ஒச்சிவரும் செங்கோன்மை காரணமாகவும் பெண்களிடத்துள்ள ஒழுக்கங் காரணமாகவும் மாசந்தோறும் மும்முறை மழை பெய்யும்.

"—தொல்லுலகில்
நல்லா ரொருவ ருளரே லவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை".

என்றவாறு தானதருமஞ் செய்கின்ற பெரியோர் உலகத்திற் சஞ்சரிப்பரேல் அப்பெரியோர் பொருட்டும் மழை பெய்யுமென்பர். இவற்றையெல்லாம் ஊன்றிச் சிந்திக்கும் போது மக்களுடைய சற்கருமங்கள் வாயிலாக மழை பெய்யுமேயன்றி வேறு எவ்வகையானும் மழை வேண்டிய காலத்திற் பெய்யமாட்டா தென்பதும், கடவுளருளாலன்றி மனிதன் நினைத்தமாத்திரத்தே பெய்யாதென்பதும் இனிது புலப்படும்.

முற்காலத்திலே முனிவர்களும் பெரியோர்களும் பிராமணர்களும் உலகம் உய்யும் பொருட்டு முறையே தவத்தையும் தானத்தையும் யாகாதிகருமங்களையும் விதிப்படி செய்வர். கற்றவர்கள் தாங்கள் நூல்களைப் பாடும்போதெல்லாம் ஆன்மாக்கள் மீது கொண்ட கருணை காரணமாக,

"வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக"

எனவும்,

"வான்முகில்வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க"

எனவும்,

"பூதலமாதும்வாழ்க பொன்மழைபொழிந்து வாழ்க"

எனவும்,

"முன்னிய வளைத்த மூக்காத்த மின்னாநலே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்"

எனவும் பாடியுள்ளனர்.

"முன்னவற்றர் கோயிற் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குந் தீங்குள வாரிவளங் குன்றும்".

என்று பயந்து ஊரிலுள்ளவர் தத்தம் கிராமத்தில் விளங்கும் கோயில்களின் நித்திய நைமித்திகங்கள் எவையுங் குறைவில்லாமல நடைபெற்றுவரச் செய்வர். அரசரும் பெண்களும் தங்கள் தங்கள் பொறுப்பை உள்ளபடி யுணர்ந்து முறையே நீதி திறம்பாமலும் இல்லற தருமந் தவறாமலும் ஒழுகிவருவர். இப்படியே ஒவ்வொருவரும் தத்தம் கருமத்தை வழுவாது செய்துவருவர். இவைகள் காரணமாகக் காலமழையுங் குறையாது பெய்துவந்தது.

இக்காலத்திலேனிலோ விபரீதங்கள் ஏற்படலாயின. தானதருமங்கள் அலட்சியஞ் செய்யப்பட்டன. கடவுள் வழிபாடு குறையத் தொடங்கியது. நாஸ்திகம் பேசுவார் பலராயினர். யான் எனது என்னும் அகங்கார மமகார முனைப்புகள் தடித்துக்கொண்டன. கொலை களவு பிறர்க்குக் கேடுசூழ்தல் ஆதியாம் தீச்செயல்கள் மிகுத்தன. இவ்வாறயின் மழை எங்கிருந்து வரப்போகின்றது?

இப்பொழுது நிகழும் காலத்தின் கூறே அதமத்தி லதமமாகும். இக்காலத்திலே தானதருமங்கள் குறைவின்றி நடைபெற்றாலும் மழைவளங் குறையுமென்பது பெரியோர் கொள்கை. அங்ஙனமாயின், தான தருமங்களுங் குறையுமாயின் மழையைக் காத்திருப்பது புத்தியீனமாகுமல்லவா?

இப்பொழுது மழை பெய்யாமையினால் நாங்கள் மழையின்பொருட்டு முன்னோர் கைக்கொண்டு வந்த சற்கருமங்களை யெல்லாம் அனுசரித்தல்வேண்டும். ஆலயங்களில் விசேஷ அபிஷேகம் பூசை முதலியன செய்யப்படுதல்வேண்டும். ஆலயங்கட்கு அனுதினமுஞ் சென்று மழையின்பொருட்டுக் கடவுளை வழிபடுதல் வேண்டும். முன்னாளில் மழை பெய்யாவிட்டால், "கொடும்பாவி சாகாளோ கோடை மழை பெய்யாதோ! மாபாவி சாகாளோ மாரி மழை பெய்யாதோ!" என்று சொல்லிப் பலர் சேர்ந்து கொடும்பாவி கட்டி யிழுப்பது வழக்கம். அதனையும் இப்பொழுது செய்தல்வேண்டும். தருமஞ் செய்தற்கு இடம் பொருள் ஏவல் என்னும் இவைகளில்லாத் தரித்திரர்களும் தருமசிந்தையோடு கூடியவர்களாயிருத்தல் மாத்திரம் அமையும். மழை வேண்டும் என்று இங்குள்ளா ரெல்லாரும் உறுதியாக நினைப்பரேல் எல்லாருடைய மனோசக்தியும் ஒருங்கு சேரவே அதன் வலிமையினாலும் கடவுளருளாலும் மழை விரைவிலே தவறாது வருஷிக்கும்.

## சுந்தரமூர்த்திநாயனார் முதலைவாய்ப் பிள்ளையை மீட்டமை.

கொங்குதேசத்திலே திருப்புக்கொளியூரவிநாசி என்னும் ஒரு சிவஸ்தலமுளது. சேரநாட்டுக்குப் புறப்பட்ட எமது சமயகுரவர் தமது மார்க்கத்திற் சந்தித்த இச்சிவஸ்தலத்திலே ஓர் திருமடத்தில் மெய்யடியார்களுடன் வீற்றிருந்தார். திருப்புக்கொளியூர்த் திருவீதி ஒன்றில் வசித்த இரு பிராமணச் சிறுவர் சில நாட்களுக்கு முன் அங்குள்ள குளமொன்றில் நீராடச் சென்றபொழுது ஒரு சிறுவனை முதலை விழுங்கியது. மற்றச் சிறுவன் உயிர் பிழைத்து வீடு சேர்ந்தான். சுந்தரமூர்த்திநாயனார் அங்கு எழுந்தருளியபோது உயிர் பிழைத்த புதல்வனுக்கு உபநயனச் சடங்கு நடைபெறலாயது. சிறுவனைப் பயந்த தாய்தந்தையரும் சுற்றமித்திரரும் அதிக சந்தோஷமடைந்தார்கள். மங்கலநாமங்கலவாத்தியங்கள் ஒலித்தன. இவையெல்லாம் இறந்த சிறுவனுடைய தாய்தந்தையரையும் சுற்றத்தவரையும் பெரிதும் வருத்தின. அவர்கள் "எங்கள் சிறுவன் இப்பொழுது உயிருடனிருந்தால் நாங்களும் அவனுக்கு உபநயனச் சடங்கு செய்து மகிழ்ச்சியடையலாமே." என நினைந்தார்கள்; இதனால் அதிக துக்கத்தாக்கானார்கள். சுற்றத்தவர்களும் ஒருவர்பின் ஒருவராக வந்து கூடினார்கள். எல்லோரும் பேரொலியுடன் துக்கங் கொண்டாடினார்கள்.

இங்ஙனம் நிகழும் இந்த அழுகை ஒலியும் உபநயனச் சடங்கு நடைபெறும் வீட்டில் நிகழும் மங்கல ஒலியும் அங்கு எழுந்தருளியிருக்கும் எமது சமயகுரவருடைய செவிகளிலே ஏககாலத்திலே வீழ்ந்தன. சுந்தரமூர்த்திநாயனார் அங்குள்ள பிராமணர்களை நோக்கி "இந்த இரண்டு ஒலியும் ஒருங்கே நிகழ்வதின் காரணம் யாது?" என்றார். அவர்கள் நடந்த சமாசாரம் முழுவதையும் எமது நாயனாருக்கு விளக்கிக் கூறினார்கள். தங்கள் அருந்தவப் புதல்வனை முதலைக்கிரை கொடுத்த தாய் தந்தையர் இருவரும் சமயாசாரிய ராகிய சுந்தரமூர்த்திநாயனார் அங்கு எழுந்தருளியிருக்கும் சமாசாரத்தை அப்பொழுதே கேள்விப்பட்டார்கள். சுந்தரமூர்த்திநாயனார் எமது சமயாசாரியரென்பதையும், அவர் திருவெண்ணெய்நல்லூரிலே சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப் பெற்றமையையும், எம்பிரான் அவருக்குத் தோழராயமையையும் பிறவற்றையும் முன்னமே கேள்விப்பட்டுள்ள இந்த இருவரும் அவரைத் தரிசித்தலைக் கடைத்தேறும் நாள் எந்நாளோவென்று அவர் வரவை நோக்கி அருந்தவம் புரிந்திருந்தோராவர். தமது புதல்வனுடைய அகால மரணத்தையிட்டு மனவிபாகூலத்தினாற் புலம்பிக்கொண்டிருந்த இவர்கள் நாயனார் அங்கு எழுந்தருளினாரெனக் கேட்ட மாத்திரத்தே தாம் கொண்ட துயரம் முழுவதையும் அறவே விட்டார்கள்; பேரானந்த மடைந்தார்கள்; ஓடிச் சென்று அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கினார்கள். நாயனார் அவர்களை ஆசீர்வதித்துப் "புதல்வனை இழந்தவர்கள் நீங்கள் தாமோ?" எனலும், அவர்கள் "சுவாமீ! எங்கள் புதல்வன் இறந்து பலநாளாயது. அதைப்பற்றிப் பேசுவதினால் ஆவதொன்றில்லை. அது நிற்க, தமியேம் தேவரீரைத் தரிசிப்பதற்காக நெடுநாள் தவம் புரிந்தேம்; தேவரீர் இன்று இங்கெழுந்தருளப் பாக்கியம் பெற்றேம். பிறவிக் கடலினின்று கடைத்தேறினேம்" என்று விண்ணப்பித்து வணங்கி நின்றார்கள். "இல்லாரும் சுற்றமும் மைந்தரும வாழ்வும் எழிலுடம்பும் எல்லாம வெளி மயக்கே" என்றும், "அடியாருறவும் அரன் பூசை நேசமும் ஞானமுமே" உற்றதுணை யென்றும் இந்த உண்மையைக் கடைப்பிடித்தொழுகும் இருவருங் கொண்டுள்ள கருத்தை அறிந்த எமது சமயகுரவருக்கு அவர்களிடம் அதிக கருணையுண்டாயது.

நாயனார் முதலைவாய்ப்பட்டிறந்த புதல்வனை உயிர்பெற்றெழச் செய்யவேண்டி முன்னமே அப்பிள்ளை இறந்துள்ள வாவிக் கரையை யடைந்து "எற்றான் மறக்கேன்" என்னும் சொற்றொடரையுடைய திருப்பதிகம் பாடியருளினார். தம்பிரான்றோழர் அப்பதிகத்து "உரைப்பாருரை" என்னும் சொற்றொடரையுடைய நான்காவதுபாடலிற்றில் "புரைக் காடு சோலைப் புக்கொளியூரவிநாசியே, கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே" எனக் குறிப்பிட்டருளினர். இப்பாடல் முற்றுப்பெறுவதன்முன் முதலையானது முன் தான் விழுங்கியசிறுவனைக் கரையிற்கொணர்ந்து உமிழ்ந்தது. தாயும் தந்தையும் பிள்ளையை வாரித் தூக்கி யெடுத்து எமது சமயாசாரியருடைய பாதங்களில் வைத்து வணங்கினார்கள். (திருவருள் வசந்தராய் விளங்கும இத்தம்பிரான்றோழரும ஏனைச் சமயகுரவரும் மெய்யடியார் பிறரும் இது போன்ற அநேக அற்புதங்களைச் செய்து "சைவசமயமே சமயம்" என்பதைப் பல சந்தர்ப்பங்களிலும் விளக்கி நிலைநாட்டி வைத்தருளினர். அவற்றை அவ்வடியார்களுடைய திவ்விய சரித்திரங்கள் சிறக்க விளக்கிக் காட்டும்).

சுந்தரமூர்த்திநாயனார் அப்பிராமணச் சிறுவருடன் திருப்புக்கொளியூரவிநாசி என்னும் ஆலயத்தை யடைந்தார். அங்கு நின்றோரும் அடியார் கூட்டத்தினரும பின்றொடர்ந்து சென்றார்கள். எல்லோரும் அங்குச் சுவாமிதரிசனஞ் செய்தபின் நாயனார் முதலைவாய்ப் பிள்ளையின் இருக்கைக்கு எழுந்தருளினார். எமது சமயகுரவர் நல்ல சுபமுகூர்த்தத்திலே அச்சிறுவருக்கு உபநயனஞ் செய்வித்து விபூதி சாத்தி ஆசீர்வதித்துக் கொங்குநாட்டைக் கடந்து சேரமான்பெருமாணாயனாருடைய மலைநாட்டுக்கு எழுந்தருளினாரென்பதாம்.

## ஆலய உற்சவம்.

('[illegible]யன்'' என்னும் பத்திரிகையிலிருந்து அநுவதிக்கப்பட்டது).

நமது திருக்கோயில்களில் நடைபெறும் வழிபாடுகள் நித்தியம், நைமித்திகம் என இருவகைப்படும். நாடோறும் நடைபெறும் வழிபாடு நித்தியம் எனப்படும். சிறப்பான திருநாட்களில் நடைபெறும் வழிபாடு நைமித்திகம் எனப்படும். திருவிழாக்கள் எடுப்பதும் நைமித்திகமேயாகும். திருவிழாக்களை நடத்துவதன் நோக்கம் நாடோறும் கோயிலுக்கு வராத அன்பர்களுக்கும், கோயிலில்லாத சிற்றூர்களிற் குடியிருக்கும் மக்களுக்கும், பக்தியில் ஈடுபடாதவர்களுக்கும் காட்சி கொடுத்துப் பக்திப் பெருஞ்செல்வத்தை யளிப்பதற்கேயாகும். எனவே திருவிழாக்களின் நடைமுறைகள் எல்லாம் அன்பு நெறியை வளர்க்கும் முறையில் இருத்தல் வேண்டும். ஆனால், இக்காலத்தில் நடைபெறும் திருவிழாக்களில் பெரும்பான்மையானவை வீண் ஆடம்பரமயமாகவே நடைபெறுகின்றன. இம்முறையில் நடைபெறுவது களியாட்டயருவோராகிய சிறு மக்களுக்கே இன்பமாக இருக்கிறது. இப்பொழுது நடைபெறும் திருவிழாக்கள் அன்பர்களுக்கு ஒருநாளும் பிடிக்காது. ஏனெனில் திருவிழாக்களில் நடைபெறும் செயல்களிற் பல அன்புநெறிக்கு மாறுபட்டனவாகும். அன்புநெறிக்கு மாறுபட்ட வகையில் திருவிழாக்கள் நிகழ்தலால் உலக நலத்திற்கு எட்டுணையும் பயனின்று. அன்புநெறிபற்றி நடைபெறும் திருவிழாக்களே நன்னெறியை வளர்த்துச் சமய அறிவை யூட்டி உலகத்து மக்களைத் திருத்துவனவாகும்.

### வீண் செயல்கள்.

முதற்கண் தாசியர் நடனம் நிறுத்தப் பெறுதல்வேண்டும். இஃது மிக அநாவசியமான செயலாகும். பக்தி நெறிக்குப் பெரிதும் விரோதமானதாகும். இஃது எவ்வகையாலும் இறைவனைத் திருப்திசெய்வதாகாது; காமுகர்களுக்கே களிப்பூட்டுவதாகும். அன்பு நெறியை வளர்க்க எழுந்த விழா, காமக்கடுங்கனலை வளர்த்தல் பெருந் தீமையாகும். பொய்க்காற் குதிரையாட்டம், காகமெடுத்தல், வில்லடித்தல், பொம்மையாட்டங்கள், கத்தி கம்பு விளையாட்டு, புலி வேடம், முதலிய சி[illegible]செயல்கள் [illegible] தப்பெறல்வேண்டும். இவைகளெல்லாம் உருவ வழிபாட்டையே கேலி செய்வனவாக-விளையாட்டுச் செயல்களாக-விளங்குகின்றன. பாமர ஜனங்கள் உள்ளத்தை மகிழ்விப்பதற்கே இவைகளைச் செய்கின்றோம் என்று சிலர் பகருகின்றார்கள். அவ்வாறாயின், அப்பாமரர்க்குப் பக்தியை ஈய எழுந்த திருவிழாவே, அவர்களுக்குப் பெரு மூடத்தனத்தைக் கொடுத்துத் தன் நோக்கத்திற்கு மாறாக அவர்களைக் கெடுத்துவிடுகின்றது. வாண வேடிக்கையும் வேண்டாத செயலேயாகும். பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடியிருக்குமிடத்தில் வீணாகக் கெட்ட புகைகளைக் கிளப்பிப் பெருந் தீமை புரிதல் அநாவசியமேயாகும். கடவுளன்பைப் பெருக்குதற்கு வாணக் காட்சி வேண்டுவதொன்றன்று. வேண்டுமானால், சுவாமி புறப்படுவதற்கு முன்னரும், சேர்க்கை சேர்ந்தபொழுதும் அறிகுறியாக அதிர்வேட்டுகள் போடலாம். மேற்கூறிய வீண் செயல்கள் அன்பு நெறியைப் பாழ்படுத்துதலோடு, வீண் செலவையும் அதிகப்படுத்துகின்றன. ஒவ்வொரு திருவிழாவிலும் இவ்வீண் விளையாட்டுக் காரியங்களுக்காக மூவாயிரம் நாலாயிரம் ரூபாய்கள் செலவழிக்கப் பெறுகின்றன. இஃது மிகவும் அநியாயமாகும். இவ்வாடம்பரங்களை நிறுத்தி, அன்பு நெறியை வளர்த்துச் சமய அறிவைப் புகட்டும் வழியிலேயே பணத்தைச் செலவழித்தல் வேண்டும். கோயிற்பணத்தை வேண்டாத வழிகளில் வீணவிரயஞ் செய்தல் பெரும் பாவமாகும்.

### நடத்தவேண்டிய முறை.

திருக்கோயிலில் மூல விக்கிரகங்கட்கு நன்றாக அபிஷேகம் செய்து, மலர் மாலை சாத்தித் திருவிளக்குகளை யாண்டும் ஏற்றிவைத்தல் வேண்டும். உற்சவ மூர்த்திக்கும் அபிஷேக ஆராதனைகள் செய்து நிறைய மலர் மாலைகளைச் சாத்துதல் வேண்டும். இரத்தின ஆபரணங்களை பேசாத்தவேண்டு மென்பது விதியன்று. இறைவனுக்குப் பெரிதும் மகிழ்ச்சியைத் தருவனவும இயற்கை அழகையும் மணத்தையும் ஒளியையும் நல்குவனவும் மலர் மாலைகளேயாகும். ஆகம விரோதமான அலங்காரங்கள் செய்தல் கூடாது. மின்சார வெளிச்சமாலைகளைச் சாத்துதல் மிக மூடத்தனமாகும். இவ்வாறு அறிவிலாத தருங்களமார் பலர் பல வகையான

(மற்றைப் பக்கம் பார்க்க.)

## வடமாகாணத்துச் சிறுத்தெருக்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள 13 சிறுத் தெருக்களைத் திருத்துவதற்காக 73,000 ரூபா மதிப்பிடப்பட்டிருக்கிறது.

## தேசபந்து ஞாபகச்சின்ன நிதி.

அகில இந்திய பம்பாய் வாசியான ஒரு பாட்டியா கனவான் 51000 ரூபாயும், ஒரு பார்சிக்காரர் 25000 ரூபாயும் இந்நிதிக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

## புகைரதப் பாதையில் நடந்து செல்லாதே.

சில தினங்களுக்கு முன் திருவள்ளூரை அடுத்த ஒரு கிராமத்திலிருந்த ஒரு மகமதிய வாலிபனும் அவன் தங்கையும் வண்ணாரப்பேட்டையில் வந்து பந்துக்கள் வீட்டில் தங்கியிருந்து ஊருக்குப் போக விரும்பி வண்ணாரப்பேட்டை ஸ்டேஷனுக்கு வந்தார்கள். ரயில் போய்விட்டது. பெரம்பூருக்கு நடந்துபோய் அங்கேயிருந்து ரயிலேறிக்கொள்ளலாமென்று சிலர் சொன்னதைக் கேட்டு ரயில் பாதையில் நடந்துபோனார்கள். வியாசர்பாடிக்கு அருகே போனபொழுது எதிரே ரயில் வந்தது. தமையன் விரைவாகத் தண்டவாளத்தைத் தாண்டி விட்டான். ஆனால் தங்கை தாண்டுவதற்குள் ரயில் வண்டி வந்து அவள்மீது ஏறிவிட்டது. உடனே அவள் இறந்துபோனாள். லோ-மி.

## நியாயப்பிரமாணப்பரீட்சைப்பேறு.

சில வாரங்களுக்கு முன் நடத்தப்பட்ட நியாயப்பிரமாணப் பரீட்சைப் பேறு வெளியாய்விட்டது. புதிய ஒழுங்குப்படியான பிறக்ரர்மாருக்குரிய 2-ம் பரீட்சையில் 17 பேர் சித்தியடைந்தனர் அவருள் மெஸ்லேஸ். K. V. இராசையா, S. பாலசுப்பிரமணியம், S. கனகசபாபதி, S. V. பாக்கியதுரை என்போர் தமிழர். கடைசிப் பரீட்சையில் நால்வர் சித்தியடைந்தனர். அவருள் மெஸ். K. V. அருணாசலம், A. M. தாசன் என்போர் தமிழராம். பழைய ஒழுங்குப்படியான கடைசிப் பரீட்சையில் 25 பேர் சித்தியடைந்தனர். அவருள் மெஸ்லேஸ். J. A. B. வஸ்தியாம்பிள்ளை, K. கணபதிப்பிள்ளை என்போர் இருவருந் தமிழர். அப்புக்காத்துமாருக்குரிய நடுப் பரீட்சையிற் [illegible]டைந்தோர் 4 பேர். தமிழரில்லை. கடைசிப் பரீட்சையிற் சித்தியடைந்தோர் 2 பேர். அவருள் மெஸ். A. ஞானப்பிரகாசமென்பவர் தமிழர். —உதயதாரகை.

## சைவப் பிரசங்கம்.

வதிரி தேவரையாழிச் சைவ வித்தியாசாலையில் நிகழும் குரோதன வருடம் ஆவணி மாதம் உ௪-ந் திகதி (8-9-25) செவ்வாய்க்கிழமை மாலை 7 மணி தொடக்கம் தெல்லிப்பழை பிறக்ரர் ஸ்ரீ கே. தம்பையா அவர்கள் "தமிழும் சைவசித்தாந்தமும்" என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு பல நுண்ணிய விளக்கமான மேற்கோள்களுடன் உபந்நியாசஞ் செய்தனர். ஷை பிரசாரகரால் சபையிலிருந்தோர் அனைவரும் அதிசயிக்கும்படியாகவும் இலகுவில் உணரக்கூடியதாகவும் அகர உகர மகாரத்தின் பாகுபாடுகள் வெண்கட்டியால் கரும்பலகையில் வரைந்து காட்டப்பட்டன. பின்னர் கோப்பாய் அரசினர் ஆசிரியகலாசாலை ஆசிரியர் ஸ்ரீ சி. தா. சிதம்பரப்பிள்ளை அவர்கள் குறிப்புரை கூறிப் பாடசாலையாருக்காகப் பிரசாரகரை உபசரித்து நன்றி பாராட்ட, ஈற்றில் தேவாரபாராயணத்துடன் சபை சமாப்தியாயிற்று. மடித.

## படித்த வகுப்பாரின் பிழைப்பு.

சென்னையில் ஒரு கனவான் குமஸ்தா வேண்டுமென்று ஆங்கிலப் பத்திரிகையில் ஒரு விளம்பரம் அன்று மாலையில் தான் செய்தார். மறுநாள் பொழுதுவிடிந்தது. காலை 10-மணி முதல் மாலை 5-மணிக்குள் 60, 70-பெயர்கள் விண்ணப்பங்களோடு வந்து நிற்பதானார்கள். இதைப் பார்க்கவே கனவான் இதில் எந்தக் குமாஸ்தாவுக்குப் பொறுமை அதிகம் என்று சோதிக்கவோ என்னவோ 10-ரூபாய் தான் சம்பளம்; அதற்குச் சம்மதமானால் விண்ணப்பம் செய்யலாம். என்று தமது பிரதம குமஸ்தாவின் மூலமாய் வந்தவர்களுக்குச் சொன்னபடி செய்துவிட்டு தாம் உள்ளே இருந்து கொண்டார் 10 ரூபாய் சம்பளத்தைக் கேட்டதும் ஒருவர் பின்னொருவராய் நழுவுவதாயினர். இவ்விதம் 250 பேர் வரையில் வந்து போகக் கடைசியில் மனதுக்குப் பிடித்த ஒருவரை 20-ரூபாயில் அமர்த்தியதாகத் தெரிகிறது. படித்த வகுப்பாரின் பிழைப்பு இப்படி இருக்கிறது. —லோ-மி

## அகழ்க்கிடங்கு விபத்து.

சென்ற வெள்ளிக்கிழமை "போக்ஸ்ஸ்றீற்"றிலுள்ள அகழ்க்கிடங்கிற் கூலியாட்கள் வேலைசெய்துகொண்டு நின்றபோது ஒருபக்கம் இடிந்தமையினால் நால்வர் அதற்குள் மூடுண்டனர் எஞ்சிநின்ற கூலியாட்கள் அவர்களை மூடியுள்ள கல்லையும் மண்ணையும் அதிசிரமத்துடன் நீக்கி எடுத்தார்கள் மூவர் கடுங்காயமுற்றனர். அவர்கள் உடனே வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். ஒருவன் இறந்தனன்.

## அரசமரத்திலிருந்துவெட்டப்பட்ட கொம்பர்கள்

மாத்தளையிலே பெத்தமகாமலுப் பாஞ்சாலையின் பக்கத்திலுள்ள அரசமரத்தின் கிளைகள் அதிகமாக நீண்டு கீழே தாங்கியமையினால் அங்குள்ள பட்டினபரிபாலன சங்கம் சிலவாரங்களுக்குமுன் அவைகளைவெட்டியது. இதனால் அதிகமனஸ்தாபமடைந்த புத்த மதத்தினர் அங்கோர் பெருஞ்சபைகூட்டி, பட்டினபரிபாலனசங்கத்தார் அரசமரத்தின் கிளைகளை வெட்டியமை தங்கள் மதக்கொள்கைக்கு விரோதமாகுமென்று தீர்மானித்து அக்குறையை நிவிர்த்தி செய்யும்பொருட்டுத் தேசாதிபதியவர்களுக்கும் மனுப்பண்ணினர் சென்ற ஞாயிற்றுக்கிழமையும் பௌத்த மதத்தவர் ஓர் விசேஷ சபை கூட்டினர். அப்பொழுது புத்தகுருமார் பலர் சமூகமளித்தனர். தறிக்கப்பட்ட கொம்பர்களுக்குச் செய்யப்படவேண்டிய கிரியைகளைப்பற்றி யோசனை செய்யப்பட்டது. ஈற்றில் அக்கொம்பர்களை, புத்தகுருமார் இறக்குங் காலங்களிற் செய்யப்படும் சகல வரிசைகளுடனும் நகர்வலமாக எடுத்துச் சென்று தகனஞ் செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இக்கிரியை தேசாதிபதியவர்களின்பதில் கிடைத்தபின்னரே செய்யப்படும்.

## அறுபதுரூபா மிச்சப்பிடித்த சிறுவனுக்குநேர்ந்த சங்கடம்.

கிக்கறுவாளன்னுமிடத்திலே பதினைந்து வயதுள்ள முதியான்சே என்னுஞ் சிங்களச் சிறுவன் ஒருவன் புதிதாய் அமைக்கப்படும் புகைரதப் பாதையில் வேலை செய்துவந்தான். அவன் தன்னைப் பிடித்துள்ள வறுமையை நீக்காது, தன் சம்பாதியத்தில் ஒரு சிறுபாகத்தை செலவு செய்து காலங்கழித்து ஒருவாறு அறுபது ரூபா மிச்சப்பிடித்ததும் அப்பணத்துடன் வீட்டுக்குத் திரும்பினான். வழியிலே அவன் பொலீசர்கையிற் சிக்கினன். பரிசோதித்தபோது அவனிடம் அறுபது ரூபா இருப்பதைக் கண்ட பொலிஸ் அப்பணத்தைப்பற்றி விசாரித்தனர். சிறுவன் தன்னுடைய தேட்டப்பணமென்று கூறினன். சிறுவனுடைமைபற்றி யவன் மேற் சந்தேகங்கொண்ட பொலீஸ் சிறுவனைப் பொலீஸ்தானத்துக்குக் கொண்டுபோய் ஒரு கிழமை காவற்படுத்தியபின் பொலீஸ்கோட்டுக்கு அழைத்துச் சென்றனர். இதற்கிடையில் உண்மை வெளியாயது. நீதிபதி அவனுடைய ஒறுப்பனவைப்பற்றி வியந்து கூறினார். அவனுக்கு நேர்ந்த துர் அதிஷ்டத்தைப்பற்றித் தான் துக்கப்படுவதாகவும் சொல்லி அவனை விடுதலையாக்கினர்.

## முயலைத் துரத்தி வந்தமுடிவு.

சென்ற வாரம் கேகாலைக்குச் சமீபமாயுள்ள டிகற்றகாமா என்னும் றப்பர்த் தோட்டத்தில் றப்பர் செப்பனிடும் செல்லையா என்னும் ஒருவர் ஒரு முயலைத் துரத்திக்கொண்டு அயலிலுள்ள தோட்டத்தினுட் புகுந்தார். அங்குள்ள அலீஸ் என்னும் சிங்களப்பெண் குறித்த செல்லையா தன்னை முறைகேடாகக் கருதி வார்த்தையாடினரெனத் தன் புருஷனாகிய விக்கிரமசிங்கிக்கு முறையிட்டனள். விக்கிரமசிங்கி அதிக கோபமுற்றுச் செல்லையாவைச் சந்தித்துத் தர்க்கமிட்டுச் சருவ முயன்றார். தோட்டத்தில் வேலைசெய்யும் கூலியாட்கள் அநேகர் செல்லையாவுக்குத் துணைபுரியச்சென்றார்கள். அயலிலவசிக்கும் சிங்களவர் அநேகர் விக்கிரமசிங்கிக்கு உதவியாகச் சென்றார்கள். இருபகுதியாரும் கல் கத்தி கட்டை முதலியவற்றினால் அதிக நேரம் கடும் போர் புரிந்தார்கள். கூலியாட்களுள் மூவர்படுகாயப்பட்டனர். ஒருவன் வைத்தியசாலைக்குக் கொண்டு போகப்பட்டவுடன் இறந்தனன். சிங்களவரும் மூவர் கடுங்காயமுற்று ஆபத்தான நிலையிற் கிடக்கின்றார்கள். பெண்களும் இச்சண்டையிற் கைகலந்தனர். விக்கிரமசிங்கியின் தாய்க்கு மூக்கிற் கடுங்காயமுண்டாயது. இப்போருக்கு மூலகாரணராயுள்ள செல்லையா விக்கிரமசிங்கி என்னும் இருவரும் சிறைப்படுத்தப் பட்டிருக்கின்றனர்.

## சூதாடிய பொலீசர்.

கென்டன்கழுவாப் பொலிஸ் தானத்துக்குச் சமீபமாயுள்ள ஒரு இடத்திலே பொலீசர் ஐவர் சூதாடிய குற்றத்தினால் வேலையினின்றும் நீக்கப்பட்டார்கள்.

## படுகாயப்படுத்தப்பட்ட மகமதியன்

சென்ற வியாழக்கிழமை கொட்டாஞ்சேனையிலே ஒரு சிங்களவனுக்கும் மகமதியனுக்குமிடையில் மனஸ்தாபம் ஏற்பட்டபோது சிங்களவன் காத்திரவண்ணம் தனது உடையில் மாட்டியிருந்த கத்தியினால் மகமதியனைப் பல இடங்களிலும் படுகாயமுறக் குற்றினன். மகமதியன் வைத்தியசாலையிலே ஆபத்தானநிலையிற் கிடக்கின்றனன்.

## ஐரோப்பியர் ஒருவரின் பெருந்தன்மை.

முடிக்குரிய காட்டை வெட்டிப் பயிர் செய்த வேடுவர் இருவர் அபராதமிறுக்கச் சக்தியில்லாது சிறைக்குச் சென்றார்களென்ற சமாசாரத்தைச் சென்ற பத்திரிகையில் வெளியிட்டுள்ளோம். சிறைக்குச் சென்ற சமாசாரத்தை "மோர்ணிங்லீடர்" என்னும் பத்திரிகை வாயிலாக அறிந்த ஐரோப்பியர் ஒருவர் அப்பத்திரிகை மானேஜருக்கு, முப்பது ரூபா பெறுமதியான ஒரு உண்டியலையும் ஒரு கடிதத்தையும் அனுப்பியிருக்கின்றனர். அக்கடிதத்தில் உலகியலறியாது காடெங்குந் திரியும் வேடுவர் சிறைக்கூடத்திலடைக்கப்பட்டு அதிக வருத்தமடைவார்களென்றும், முடிக்குரிய காணியென்பதை அவர்கள் அறியும் ஆற்றலில்லாதவர்களென்றும், அங்ஙனமாயினும் வயிறு வளர்க்கும் பொருட்டுப் பயிரிட்டமை குற்றமாகமாட்டாதென்றும், அனுப்பப்பட்டிருக்கும் முப்பது ரூபாவில் இருபது ரூபாவை அவ்வேடுவர்கள் இறுக்கவேண்டிய அபராதப் பணமாகச் செலுத்தும்படியும், எஞ்சிய பத்து ரூபாவையும் வதுளைச் சிறைச்சாலையிலிருந்து விந்தனைக்குப் போய்ச் சேரும்வரையும் வழிச்செலவுக்காக அவ்வேடர் இருவர் கையிலும் கொடுக்கும்படியும் எழுதப்பட்டிருந்தன. குறித்த பத்திரிகை மானேஜர் அப்பணத்தை வதுளைப்பொலீஸ்நீதிபதிக்கு அனுப்பி விஷயத்தையும் தெரிவித்தனர்.

## முடவன் சுகப்பட்ட அற்புதம்.

நிக்கசாமி என்னும் முடவன் ஒருவன் முப்பது வருடகாலம் குருநாக்கலில் வசித்துவந்தான். அவன் நடக்கும்போது இரண்டு நீண்ட தடிகளைக் கக்கத்துள் உபயோகித்து வருவான். தன்னுடைய நோயைச் சுகப்படுத்தும் பொருட்டு ஆங்கில வைத்தியம் சுதேச வைத்தியம் என்னும் இரண்டினும் திறமைவாய்ந்த வைத்தியருடைய சிகிச்சையைப் பலமுறை பெற்றும் சுகப்பட்டிலன். வைத்தியமுறையிற் பிரயோசனமில்லையெனக் கண்ட நிக்கசாமி பல நேர்கடன்களைச் செய்தான். அவற்றாலும் சுகப்படவில்லை. இனி உலகில் உயிருடனிருப்பதாற் பிரயோசனமில்லையென அவன் ஒருமுடிவு செய்தனன். குருநாக்கலிலே மாரியம்மன் கோவிலிலுள்ள பூசாரி ஒருவர் தீராநோய்களை நீக்குவதாகக் கேள்விப்பட்ட நிக்கசாமி, இற்றைக்கு இரண்டு மாதங்களுக்குமுன் அங்கே சென்று தன் குறையைப் பூசாரிக்கு முறையிட்டான். பூசாரி அந்த ஆலயத்தைச் சுற்றியுள்ள இடத்தைத் தினந்தோறும் பெருக்கிச் சுத்தஞ் செய்யும்படியும் ஆலயத்துக்கு வருவோரின் உபயோகத்துக்கு வேண்டிய தண்ணீர் கொண்டுவரும்பொருட்டும் கட்டளையிட்டனர். இந்த இரண்டுகருமமும் அநேக வருடகாலம் நொண்டியாயிருந்த ஒரு முடவனாற் செய்யக்கூடாதனவாம். ஆயினும் நிக்கசாமி அவற்றைச் செய்வதாக வாக்குப் பண்ணி அதிக சிரமத்துடன் செய்துவரலானான். இற்றைக்குச் சிலவாரங்களுக்குமுன் ஒரு வெள்ளிக்கிழமை பிற்பகல் அப்பூசாரி நிக்கசாமியை ஆலயத்துள் அழைத்துச்சென்று சில கிரியைகள் செய்து வழிபட்டபின் முடவனைத் தனது இரண்டுகைகளாலும் தூக்கி எழுந்து நிற்கச்செய்து, அவன் முதுகில் இருமுறை மோதியடித்து நடந்துபோகும்படி கட்டளையிட்டனர். நிக்கசாமி தன்னறிவு இழந்தவனாய்ச் சிறிது தூரம் நடந்துசென்றபின் அறிவு வரப்பெற்றுத் தனது நொண்டித்தன்மை நீங்கியமையை யறிந்தான். அன்றுமுதலாக அந்தப்பூசாரியின் மகிமையைப் பலரும் வியந்து பேசுகின்றார்கள். சன்மார்க்கம் ஈசுரபத்தி சீவகாருண்ணியம் முதலான குணங்களையுடைய மனிதர் இதனையும் இதுபோன்ற பிறவற்றையும் செய்யும் ஆற்றலுடையவரென்பது ஆன்றோர்வாக்கியம். இதுபோன்ற அநேக அற்புதங்களைக் காலத்தோறும் உத்தமர் பலர் செய்திருக்கின்றனர்,

## புரட்டாதிமாச விசேஷதினங்கள்.

| | | |
|---|---|---|
| 2உ. | (17-9-25) | வியாழக்கிழமை மஹாளய அமாவாசை |
| 3உ. | (18-9-25) | வெள்ளி: நவராத்திரி பூஜாரம்பம். |
| 4உ. | (19-9-25) | சனி: [illegible] வெங்கடேசப் பெருமான் மகோற்சவாரம்பம். |
| 6உ. | (21-9-25) | திங்கள்: சதுர்த்தி விரதம். |
| 9உ. | (24-9-25) | வியாழன்: சரஸ்வதிபூஜாரம்பம். |
| 11உ. | (26-9-25) | சனி: மகா நவமி சரஸ்வதி பூசை, ஆயுதபூசை. |
| 12உ. | (27-9-25) | ஞாயிறு: விஜயதசமி ஏனாதிநாதநாயனார் குருபூசை. |
| 14உ. | (29-9-25) | செவ்வாய்: பிரதோஷம். |
| 15உ. | (30-9-25) | புதன்: நரசிங்கமுனையர் குருபூசை. |
| 16உ. | (1-10-25) | வியாழன்: பூரணைவிரதம். |
| 17உ. | (2-10-25) | வெள்ளி: வல்லிபுரக்கோவில் சமுத்திர தீர்த்தம். |
| 18உ. | (3-10-25) | சனி: உருத்திர பசுபதிநாயனார் குருபூசை. |
| 20உ. | (5-10-25) | திங்கள்: கார்த்திகை விரதம். |
| 22உ. | (7-10-25) | புதன்: திருநாளைப் போவார்நாயனார் குருபூசை. |
| 29உ. | (14-10-15) | புதன்: அருணந்தி சிவாசாரியர் குருபூசை |
| 30உ. | (15-10-25) | வியாழன்: பிரதோஷம் இரவு 59 நாழிகைவரையில் நரகசதுர்த்தசிஸ்நானம் |
| 31உ. | (16-10-25) | வெள்ளி: தீபாவலிப் பண்டிகை. |

## திரிகோணமலை மாதர் ஐக்கிய சங்கம்.

இச்சங்கத்தின் கூட்டமொன்று சென்ற ஆவணிமாதம் 22உ சனிக்கிழமை திரு. ஸ்ரீ சண்முகவித்தியாலயத்திற்கூடியது. அத்தருணம் பிரம்மஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் அவர்களால் தம்பிரான் தோழராய சுந்தரமூர்த்தி நாயனார் சரிதையின் முதற்பாகம் பிரசங்கஞ் செய்யப்பெற்றது. ஸ்ரீமதி கு. தெய்வநாயகி அம்மாளால் குறிப்புரை கூறப்பட்டது. சங்க ஆரம்பத்திலும் ஈற்றிலும் ஷை வித்தியாலயச் சிறுமிகளாலும் ஷை உபாத்தியாயகர்அவர்களின் புத்திரிகளாலும் ஸ்ரீமதி புவனேஸ்வரி அம்மாள் ஸ்ரீமதி இரத்தினசௌந்தரியம்மாள் ஸ்ரீமதி காந்திமதியம்மாள் ஆகியஇவர்களாலும் தேவாரமோதப்பட்டது. எட்டுமணியளவில் கூட்டம் முடிவுற்றது.

அடுத்த கூட்டம் (5-9-25) புரட்டாதி 5உ சனிக்கிழமை சாயந்தரம் 5½ மணியளவிற் கூடியது. அன்று சுந்தரமூர்த்திநாயனார் சரிதையின் பிற்பாகம் ஷை உபாத்தியாயகர் அவர்களால் பிரசங்கஞ்செய்யப்பட்டது. பின், ஸ்ரீ. மயில்வாகனக்குருக்கள் அவர்களால் ஓர் சிறந்தசொற்பொழிவு சுருக்கமாய்க் கூறப்பட்டது. கூட்ட ஆரம்பத்திலும் முடிவிலும் தேவாரம் ஓதப்பட்டது. இச்சங்கத்தாரதுகேள்விக்கிணங்கிச் சிறந்தமெய்த்தொண்டர் சரிதையைப் பிரசங்கம் செய்த குருக்களவர்களுக்குத் திருவருள் முன்னிற்பதாக. சடித.

## நாவலப்பிட்டி இந்துவாலிபசங்கம்

ஷை சங்க ஆதரணையின்கீழ் பின் குறிப்பிடும் விஷயங்கள் கதிரேசன் வித்தியாசாலைமண்டபத்தில் மாலை 6½மணிதொடக்கம் வெள்ளிக்கிழமை (4-9-25) சனிக்கிழமை (5-9-25) ஞாயிற்றுக்கிழமை (6-9-25) ஆகிய மூன்று தினங்களிலும் முறையே பிரசங்கஞ் செய்யப்பட்டது.

வெள்ளிக்கிழமையன்று இராசதானியிலுள்ள சிருங்கேரியிலிருக்கும் சங்கராச்சாரியார் மடத்தைச் சேர்ந்தவரும் வேதாகமசமஸ்கிருதபண்டிதரும் இந்திய யோகானுபவமுள்ள சங்கத்தின பொறுப்பாளிகளுள் ஒருவருமாகிய ஸ்ரீமத். சுவாமி பாலசரஸ்வதிபாரதியாரவர்களால் "வேதாகமங்கள்" என்னும் விஷயமாக ஓர் சிறந்தஉபந்நியாசம் செய்யப்பட்டது. அத்தருணம் அநேகர் குழுமியிருக்க, ஸ்ரீ. கா. கனகசபை அவர்கள் தலைமையாயிருப்பச் சபை நடைபெற்றது. சுவாமியவர்கள் இப்போதுள்ள பலசமயங்களும் சிறிது காலத்திற்கு முன்னரேயே தோற்றினவென்றும், வேதாகமங்களோ காலவரையறை கடந்துள்ளனவென்றும், அவற்றின பல பிரிவுகளையும் அவற்றை அநுசரிக்கவேண்டிய முறைகளையும் அவற்றாலுண்டாகும் பலாபலன்களையும் சமஸ்கிருத தமிழ் மொழி மேற்கோள்களை ஆதாரமாகக்கொண்டு மிக நுட்பமாக விளக்கினார்.

உலகத்திலுள்ள பல் வேறு சமயங்களும் பராபரவஸ்துவாகிய ஒரே கடவுளையே பதியாகக் கொண்டு பல்வித வழிபாடு செய்துவரினும், அவற்றின் நோக்கமெல்லாம் [illegible] யாதுமென்றும் இயற்றையே வேதாகமங்களும் விரித்துக் கூறுகின்றனவும் மற்றும் ஞானிகள் முனிவர் முதலியோருடைய அநுபவங்களும் இதே குறிப்பிக்கின்றன; கடவுள் எங்கும் வியாபகமாயிருக்கின்றனராயினும் மனிதரோ இவற்றின ஒரு பகுதியாகிய ஆணவம் [illegible] ஆணவம் கன்மம் மாயையாகிய மும்மலங்களால் சூழப்பட்டிருத்தல் போல,

விரோத அலங்காரங்களைப் பல இடங்களிற் செய்கிறார்கள். இவைகளெல்லாம் அடியோடு நிறுத்தப்பெறல் வேண்டும். தமிழ்வேத பாராயணம் அவசியம் வேண்டற்பாலதாகும். சைவவடிவமாகப் புராணப் பிரசங்கஞ் செய்தலும் வேண்டுவதேயாகும். இன்னிசைக் கருவியாகிய நாகசுரமும் வேண்டுவதென்றேயாகும். திருவிழாக் காலத்தில் திருக்கோயில் திருவோலக்க மண்டபத்தில் ஒவ்வொரு நாளும் சிறந்த அறிஞர்களைக்கொண்டு சிறந்த சொற்பொழிவுகள் செய்வித்தல் வேண்டும். சமய அறிவைப் புகட்டும் இனிய தண்டுப் பிரசுரங்களை வழங்குதல் வேண்டும். இவை யிரண்டுமே முக்கியமான காரியங்களாகும். இவைகளே திருவிழாவின் நோக்கத்தைப் பூர்த்தி செய்வனவாகும். இவைகளே திருக்கோயிற் றருமகர்த்தாக்கள் சமயவளர்ச்சி கருதிச் செய்யவேண்டிய சிறந்த தொண்டுகளாகும். இவைகளை விடுத்து, வீண் டம்பச்செயல்களைச் செய்வது அறியாமையேயாகும்.

நேரம்.

அகாலத்தில் சுவாமி எழுந்தருளச் செய்தல் எல்லா வகையாலும் மிகவும் விரோதமாகும். காலை விழா சரியாக ஆறுமணிக்கு ஆரம்பமாகி எட்டுமணிக்குள் முடிந்துவிடுதல் வேண்டும். அந்தக் காலை விழா வெனும் பெயருக்கும் ஜனசுகத்திற்கும் பொருத்த முடையதாகும். இவ்வாறின்றிச் சில இடங்களில் பத்துமணி முதல் பன்னிரண்டு வரை பகல் விழாவாக நடைபெறுகின்றது. கொடிய வெயிலில் ஜனங்கள் பெரிதுங் கஷ்டப்படுகிறார்கள். இரவில் எழுமணி முதல் பத்து மணிக்குள் விழா முடிந்துவிடுதல் வேண்டும். பேயும் உறங்கும் நள்ளிரவில், ஒருமணிக்கு எழுந்தருளச்செய்து, விடியற்காலம்வரையில் விழாவை நடாத்துவது தகுதியில்லாச்செயலேயாகும். ஆகம விரோதமும் சுகவிரோதமுமாகும். இவ்வாறு நள்ளிரவில் நடைபெறும் விழாக்கள் தெருக்கூத்திற்குச் சமமாகவே விளங்குகின்றன. பதநகாட்களிலும் சோர்ந்து கண்விழித்து மக்கள் பெரிதும் அநாவசியகமாகத் துன்புறுகிறார்கள். நாகசுரக்காரர், தேவாரத் திருக்கூட்டத்தினர், கோயிற் சிப்பந்திகள் முதலியவர்கள் கண்விழிப்பதோடு அதிக வேலையுஞ் செய்ய வேண்டியதாகவிருத்தலால் பெரிதுந் துன்புறுகின்றனர். சுவாமியுடன் கூடவே தொடர்ந்துவர என்றும் பஜனைக் கோஷ்டிகளும் பக்தர் குழாங்களும் மிகவுந் துன்புறுகின்றன. எனவே அகாலத்தில் சுவாமி யெழுந்தருளச்செய்வது அடியோடு நிறுத்தப்படுதல் வேண்டும். எல்லோருஞ் சுகத்தை யடையும்படி சரியான நேரத்தில் சுவாமியை யெழுந்தருளச் செய்தல்தான் உத்தமமாகும்.

சில தொண்டுகள்.

திருவிழாவில் வரும் மக்களுக்குச் சில சௌகரியங்கள் செய்யப்பெறல் வேண்டும். ஸ்தலஸ்தாபன அதிகாரிகளைக்கொண்டு ஆங்காங்கு மலகூடங்கள் கட்டிவைத்தல் வேண்டும். இன்றேல் மக்கள் வீதிகளையும் கோயிற்பிரகாரங்களையும் பெரிதும் அசுத்தப்படுத்தி விடுகிறார்கள். தினந்தோறும் தெருக்களை நன்றாகக் கூட்டித் தண்ணீர் தெளிக்கச் செய்தல்வேண்டும். ஒரு தொண்டர் குழாத்தினரை ஏற்படுத்தித் திருட்டு முதலியன நடைபெறாதவாறு காவல் செய்தல் வேண்டும். வண்டிகளை ஒரு தனியிடத்தில் நிறுத்தச் செய்தல் வேண்டும். கடை முதலியவைகளைச் சுவாமி எழுந்தருளும் வீதியில் நெருக்கமாக வைக்கச் செய்து ஆபாசப்படுத்தும்படி இடந்தருதல் கூடாது. சூதுக் கடைகள் வைத்தற்கு வாடகைக்கு இடங்கொடாது தடுத்தல்வேண்டும். விழாக்காலத்தில் கோயிலை அடிக்கடி சுத்தப்படுத்திக்கொண்டிருத்தல் வேண்டும். அறிவிலாத ஜனங்கள் அசுத்தப்படுத்தாதவாறு சில காவற்காரர்களை ஏற்படுத்தித் தடை செய்தல் வேண்டும். கோயிலில் வெளிச்சம் நிறைய இருத்தல் வேண்டும். அசுத்தமான திருக்குளங்களை ஜனங்கள் உபயோகப்படுத்தாதபடி செய்தல்வேண்டும். வருகிற அன்பர்களைப் பிச்சைக்காரர்கள் துன்புறுத்தாதபடி தகுந்த ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். விழாக்காலத்தில் திருக்கோயிலில் ஒவ்வொரு சந்நிதானத்திலும் தெரிசனஞ் செய்ய வருபவர்களுக்குச் சுவாமி கிடைக்கும் முறையை வகுத்துவிடுதல் வேண்டும். இன்று நமது சமயப் பெருநோக்கத்தைப் பெரிதும் இழிவு செய்வதாகும். அர்ச்சனை முதலியவைகளுக்கு அதிகமான கட்டணங்களை விதிக்கக்கூடாது. எல்லா வகையாலும் அன்பு நெறியையும் இன்ப நெறியையும் வளர்க்கக்கூடிய வழியிலே திருவிழாக்கள் நடாத்தப்பெறல் வேண்டும். மேற்கூறிப் போந்தவாறு திருத்தமான முறையில் நடைபெறும் திருவிழாக்களே பயன் தருவனவாகும்.

## இலங்கைப் பரிபாலனச் செலவுத் திட்டம்.

—o—

[கௌரவ ஸ்ரீ. சு. இராசரத்தினமவர்கள் பரிபாலனச் செலவுதிட்ட விஷயமாக நடந்த விவாதத்திற் கூறியவை]

(முற்றொடர்).

சர்வகலா சங்கமும் கல்வியூட்டும் முறையும்.

இன்று ஊட்டப்படும் கல்வி விஷயமாகச் சில பேச விரும்புகிறேன். இலங்கையில் ஸ்தாபிக்கவிருக்கும் சர்வகலாசங்கத்தைப் பற்றிச் சொல்லுமிடத்து, இலங்கையிலுள்ள ஒவ்வொரு பிரதான பட்டினத்திலும் சர்வகலாசங்கக்கல்லூரி யொன்று இருத்தல் வேண்டும். இவைகளுக்கு மேலாக ஒரு சர்வகலாசங்கம் இருத்தல்வேண்டும். எனது அபிப்பிராயம் இப்பொழுது அங்கீகரிக்கப்படுமோவென்பது சந்தேகம். ஏனெனில் அரசினரும் எவ்விதம் பார்க்கக்கூடிய அனுபவம்வாய்ந்த சட்டநிரூபணசபைப் பிரதிநிதிகள் சிலரும் சர்வகலாசங்கக் கல்லூரியொன்றுதான் இருத்தல்வேண்டுமென்ற எண்ணமுடையவர்களாக இருக்கின்றார்கள். சர்வகலாசங்கம் இருப்பதற்குக் கொழும்பு நகரம் வாய்ந்த இடமன்று. இந்தியாவில் இந்த விஷயமாக என்ன நடக்கிறதென்று பார்ப்போம். முதல் முதல் கல்கத்தாவில் ஒரு சர்வகலாசங்கம் ஸ்தாபிக்கப்பட்டமை உண்மையாகும். கல்கத்தா இந்தியாவின் தலைநகரமாய் இருந்தமையினால் முதன் முதல் அங்கே ஒன்று ஸ்தாபித்தார்கள். ஆனால் கல்கத்தாவிலே சர்வகலாசங்கமொன்றை ஸ்தாபித்தபிழையை நாற்பது வருஷங்கட்குப்பின்னர்த்தான் கண்டார்கள் கல்கத்தாநகரம் சர்வகலாசங்கத்தை ஸ்தாபிக்குதற்கு ஒரு தக்க இடமல்ல. சனநெருக்கத்தோடும் உஷ்ணத்தோடுங்கூடிய சுத்தமற்றதுமாகிய கொழும்புநகரம் சர்வகலாசங்கம் ஸ்தாபித்தற்குவாய்த்த இடமல்ல. இங்கே மாணுக்கர் வசதியாகவிருந்து படித்தல் முடியாது. அமிர்ச்சியோடும் சுத்தகாற்றோடுங் கூடிய சனநெருக்கமில்லாத ஒரு இடமே சர்வகலாசங்கஸ்தாபனத்திற்கு வாய்ப்பான இடமாகும். கொழும்பு மாணுக்கருடைய மனம் ஒருவழிப்படாது கலைதற்கு ஏதுவான பட்டினம். ஆசிரியர்கள் வகுப்புநேரத்திலன்றி மற்றும் நேரத்திலே மாணுக்கருடன் இருப்பதற்குக் கொழும்பு வாய்ப்பான இடமன்று. ஆசிரியரும் மாணுக்கரும் இயன்றவரையில் ஒருங்குவசிப்பது மிகநன்மையாகும். ஆசிரியர்களாயுள்ளவர்கள் எவ்வளவோ அரிய விஷயங்களை மாணுக்கருக்கு வகுப்பு நேரமல்லாத மற்றநேரத்திலே பயிற்றிவைத்தல் கூடும். சர்வகலாசங்கக்கட்டிடத்தின்பொருட்டு நாற்பது லக்ஷ பிரமாணங்கொண்ட நிலத்தை வாங்குவது அரசினரின் நோக்கமானால், அத்தனைக் கொழும்புப்பட்டினமல்லாத மற்றவிடத்தில் வாங்குதல் நன்று அப்படிவாங்குவதினால் பணச்செலவு குறையும். வேறு இடத்தில் சர்வகலாசங்கம் ஸ்தாபிக்கப்படவே, அது முற்றிலே ஒரு பட்டினமாகவந்துவிடுமெனபது நிச்சயம். அப்பொழுது அரசினர் தம் பொறுப்பிலுள்ள நிலத்தைப் பிறருக்கு விற்காது குத்தகைக்குக் கொடுத்துப் பெருந்தொகைப்பணத்தைத் தேட்டலாகும். இப்படியே கேம்பிரிஜ் சர்வகலாசங்கத்தாரும் ஆக்ஸ்வோட் சர்வகலாசங்கத்தாரும் செய்துவருகின்றனர். இந்த வருமபடியைச் சர்வகலாசங்கத்தின்பொருட்டே வுசெய்தலாகும் இலங்கைச்சர்வகலாசங்கம் நான சொல்லுகிறபடி சுகந்தக்கோறு வசதியான இடத்திலேயே வைக்கப்படுதல் வண்டும்.

அரசினர் இன்றுள்ள சிறுவர்கட்கு ஊட்டும் பொதுக்கல்வியைப்பற்றியுஞ் சில சொல்லுகிறேன். நமது நாட்டிலே சுதேசபாஷைக் கல்வி அதிகமாக ஊட்டப்படுதல்வேண்டும். மேலும் முனசெருரு சந்தர்ப்பத்தில் மார்ட்டிமக்கலே வுஸ்காளத்தைப்பற்றிக் கூறிய பிரகாரம், இன்று ஊட்டப்படும் கல்வி இருதுள்ளவை பெறத்தனாலும் இரத்தத்தாலும் மாத்திரம் சுதேசிகளாக விருக்கவிடுத, குணம் செயல் எண்ணம் போகது என்னும் இவைகளில் இன்றுள்ளாரையும் ஆங்கிலராகவும் இயல்புடையதாகும். ஆதலினால் இப்பொழுது ஊட்டப்பட்டுவரும் கல்வி முறையை மாற்றிவிடுதல்வேண்டும்.

உபாத்தியாயர்களவேதனம்.

அடுத்த விஷயம் உபாத்தியாயர்களின் வேதனத்தைப் பற்றியதாகும். உபாத்தியாயர்களுக்கு வேதன விஷயமாக இப்பொழுது ஒரு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது. அந்த ஒழுங்கிற் சில குறைகள் இருப்பது உண்மையாயினும், அரசினர் அவற்றைத் திருத்தி அதனை நடைமுறைச் செய்தல் வேண்டும்.

வித்தியாபகுதிப் புதிய டைரக்டராயினீ வந்தபின்னர் வட மாகாணத்திலே பிள்ளைகள் படிப்பிக்கப்படவேண்டிய தமிழ்த்துப் பாடபுத்தகங்கள் [illegible] உற்சாகம் அரிய [illegible] அவசியமான [illegible] ஆசிரியர்களுக்கு, படிப்பிக்கவேண்டிய முறையைக் காட்டி அவர்களைத் திருத்துதல்வேண்டும். பிள்ளைகளுக்குப் படிப்பிக்கப்படல் வேண்டுமேயன்றி அவர்கள் புத்தகங்களையும் ''நோட்புக்'' புத்தகங்களையும் தமிழ்ச் சுமந்துகொண்டு வருதல் [illegible] பள்ளிக்கூடத்திற்கு [illegible] போவதனால் மாத்திரம் யாதும் நன்மையில்லையாம். (வரும்)

## சர்வதேசச் சுகாதார மகாநாடு.

இம்மகாநாடு வருகிற அக்டோபர்மீ 18உ ஜப்பானிலே கூடும்.

## பம்பாயில் தொழிற்சாலைகள் மூடப்பட்டன

பம்பாயிலே தொழிற்சாலைகள் மூடப்பட்டமையினால் ஆயிரக்கணக்கான வேலையாட்கள் தொழிலின்றித் திண்டாடுகின்றார்கள்.

## கிளிநொச்சியிலே புகைரதம் தங்குமிடம்.

இந்தச் செப்டெம்பர்மீ 15உ தொடக்கம் எல்லாப் புகைரதங்களும் கிளிநொச்சியிற் றங்கிச் செல்லும். பிராயணச் சீட்டு விற்கப்படும் ஸ்தானமும் அங்கே அமைக்கப்படும்.

## சங்காபிஷேகமும் கருப்பூரதீபோற்சவமும்.

நீர்வேலிக் கந்தசுவாமிகோயிற் கும்பாபிஷேக தினமாகிய கேற்றைய்த்தினம் பகல் மகாசங்காபிஷேகமும் இரவு கருப்பூரதீபோற்சவமும் மிகச் சிறப்பாக நடைபெற்றன. அடியார்களது "அரஹரா" என்னும் பேரொலியும் கருப்பூரதீபக் காட்சியும் எவர்களையும்பரவசப்படுத்தின. ஆலய உற்சவங்கள் இந்த முறையாக நடத்தப்பெறுமேல் நன்மழை வருஷிக்கும் நாடு சிறக்கும். சமயமும் விருத்தியெய்தும்.

## ஆங்கில உபாத்தியாயர்களின் வேதனம்.

வித்தியாபகுதியார் உதவிநன்கொடை பெறும் ஆங்கில பாடசாலைகளை மூன்று பிரிவாகப் பிரித்து ஏற்படி வேதன ஒழுங்கை அமைத்திருக்கிறார்கள். இப்பொழுது வித்தியாகர்த்தர் எல்லாப் பாடசாலை முகாமைக்காரருக்கும் ஓர் சுற்றுநிருபம் அனுப்பி, மேற்சொன்ன ஒழுங்கின்படி வேதனம் கொடுக்கப்போகிறீரென்று கேட்டிருக்கிறார். நியமித்த ஒழுங்குக்கு மேற்பட இப்பொழுது சம்பளங் கொடுப்பவர் அதை அப்படியே நடத்திவரலாமென்பதும் அதனால் ஏற்றமாகக் காணப்படுந்தொகை வருடந்தோறும் சிறிது சிறிதாக் குறைக்கப்படுமென்பதும் நிருபத்திற் குறிக்கப்பட்டிருக்கின்றன.

## கொடும்பாவி கட்டி யிழுத்தல்.

கொடும்பாவி கட்டி யிழுப்பவர்கள் இப்பொழுது இக்குள்ளார்கிளர் செய்கிறபடி பகல் முழுவதும் உண்டாட்டுக் களியாட்டிற் காலங்கழித்துவிட்டு இராக்காலத்திலே அநாசாரத்தோடு வேடிக்கையார்த்தமாகப் பொருள் சேர்த்தலின் நிமித்தம் கொடும்பாவி கட்டி யிழுப்பதனால் வரும் பயன் யாதுமிலலையாம். கொடும்பாவியிழுப்போர் கடவுட்பத்தியுடையவர்களாய் ஆசாரசீலராய் விரதமிருந்து மழைபெய்தல்வேண்டுமென்ற சிந்தனையுடையவராய், ஆலயங்களுக்குப் பாற்காவடி எடுப்பவர்கள் எத்துணை மனத்தூய்மையுடன்செய்கின்றார்களோ அத்துணை மனத்தூய்மையோடு செய்தல்வேண்டும். பொருள் வருவாயைவிட்டு நாடகமாதிரியாகச் செய்யின் ஒருபோது இனிமேற் பெய்யவிருக்கும் மழையும் பெய்யாதொழியும்.

## தென்னாபிரிக்க துறைமுக வேலையாட்கள்.

தென்னாபிரிக்காவில் துறைமுகங்களில் வேலை நிறுத்தஞ் செய்துள்ள தொழிலாளர்கட்கு பதிலாக இந்தியாவினின்றும் தொழிலாளர்களை வரவழைக்க அதிகாரிகள் முயன்று வருவதாகவும் இந்தியத் தொழிலாளர்களை அனுப்பலாகாதெனத் தென்னாபிரிக்க இந்தியப் பிரதிநிதிகள் கேட்டுக்கொள்வதாகவும் பண்டித மோதிலால் நேருவிற்கு ஒரு தந்தி கிடைத்திருக்கிறது. கல்கத்தா கப்பல் தொழிலாளர்கள் எவரும் தென்னாபிரிக்கா செல்லலாகாதெனத் தீர்மானித்துக் கொண்டார்களென அறிகிறோம். தொழிலாளர்கள் இருபத்துநான்கு மணி நேரத்துக்குள் வேலைக்கு வரவேண்டுமென்றும், இல்லையேல் கடுமையான நடவடிக்கைகள் நடத்தப்படுமென்றும் அதிகாரிகள் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்களாம். ஓரிடத்தில் அறுபத்துநான்கு பேர் இரண்டு வாரச் சிறைத்தண்டனை விதிக்கப்பெற்றனரென்றும், ஓரிடத்தில் முந்நூறுபேருக்கும் மற்றோரிடத்தில் எண்பத்தொன்பது பேருக்கும் 'வாரண்ட்' பிறப்பித்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அரசாங்கத்தார் தலையிட்டு ஒரு முடிவு செய்யப்போவதாகவும் தெரிகிறது.—"நவசக்தி".

## விளையாட்டு வினையாக முடிந்தது நால்வர் மாண்டனர்.

ஒருவர் ஆபத்தான நிலையிலிருக்கின்றார்.

வதிரி லோலிழல்லை அம்மன்கோவிலில் இந்த ஆவணிமீ நடைபெற்ற உற்சவத்தில் 10ந் திருவிழாவுக்காக நிகழும் ஆவணிமீ 5உ (30-8-25 ஞாயிற்றுக்கிழமை அப்பகுதியில் ஓர் வீட்டிலிருந்து சில வாலிபர் எதிர்வெடி சுற்றிக்கொண்டிருக்கும் பொழுது அவர்களில் ஒருவர் மருந்திலன் கட்டிகளிருக்கின்றனவென்று ஓர் தடியை எடுத்துப் பெட்டியில் இருந்தமருந்துள் வைத்து நெரிக்க உடனே மருந்து வெடித்தது அந்தக்ஷணமே மருந்தை நெரித்தவாலிபனுக்கு இரண்டுகைகளும் ஒடிந்தன முகம் விகாரரூபமாயது. அவன் உடனேமரணமாயினன் இன்னுமறுவர்காயமுற்றனர் அவருள்ளும் மூவர் மனிதர்பார்த்துக்கொள்ளக்கூடாத அவலக்ஷணமான கடுங்காயமடைந்தனர் அவ்வீட்டில் அவர்களிருந்த பத்தியில் நாலுயார் வரையிற்சதுரமான இடத்திலுள்ள ஓடுகளையெல்லாம் அவ்வெடி உடைத்துஉதறித் தூரத்தில் எறிந்து விட்டது பக்கத்திலுள்ள சுவர் நெகிழ்ந்தது அருகிலிருந்த அம்மியுங் குளவியும் சின்னபின்னமாயின காயமுற்றவர் எல்லாரும் புலோலி வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டனர்: சற்றுவேளையில் இன்னொருவர் மரணமாயினர் அடுத்தநாளாகிய திங்கட்கிழமை மரணவிளக்கம் நடைபெற்றது அன்றேதறித்த 10-ந்திருவிழாவுமாகும் அதற்காக ஏற்பட்டு வந்த விசேட மேளகாரர் தாசிகள் வாணக்காரர் கோயிலுக்குவந்துமீண்டனர். விளக்கம் முடிந்து இருபிரேதங்களையும் ஒன்றன்பின் ஒன்றாகக் கொண்டுபோனதே திருவிழாவாயிற்று. ஊர் முழுவதும் கலங்கின அடுத்த 20உ ஆகிய (4-9-25 வெள்ளிக்கிழமை ஷைகோவிலில் சிறந்த 14-ந் திருவிழாவாகும் அன்றும் ஷை காயக்காரருள் இருவர் இறந்தனர் இன்னும் ஒருவர் ஆபத்தான நிலையில் இருக்கிறார். "மரத்திலிருந்து விழ்ந்தவனை மாடேறி மிதித்த சீலமாக இவர்களில் மாண்டவர்போக மிஞ்சவர்களில் "உத்தரவின்றி வெடிமருந்து வைத்தார்க"ளென்று அரசாட்சியார் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். பரிதாபம்! கடித.

## இந்துசாதன பத்திரிகாசிரியர். அவர்களுக்கு.

ஐா,

முன்னர், தங்கள் இந்துசாதனத்தில் வெளியிட்டபடி ஓர் சிங்களர் தமது பௌத்த மதத்தை விடுத்து இந்துசமயத்திற் பிரவேசித்து, காவிவஸ்திரம் தரித்து முத்திரைக்கண்டி போட்டு வழியில் வர, பாடசாலைக்குச் சென்ற பிள்ளைகள் பயந்து ஓடிச்சென்று தங்கள் பெற்றோரிடம் "ஓர் சந்நியாசி எங்களைப்பிடிக்க வந்தா"னென முறையிட, பெற்றோர் போலீசருக்கு அறிவித்தனர் போலீசர் அவரைப் பிடித்து வழக்குத் தொடர்ந்தனர் நீதிபதி குற்றவாளியை நிரபராதியெனக் கண்டு "றெயில் பாஸ்" கொடுத்து இவ்வூரை விடுத்துக் கொழும்புக்குச்செல்ல உத்தரவு செய்தார் பின்பு ஓர் பைத்தியகாரன் தனது பசிக்கொடுமையினால் அப்பம் சுடும் வீட்டிற் சென்று, பின்னையொன்று அப்பம் தின்றுகொண்டு எடுக்கும் போது எனக்குந் தாவெனச் சைகை காட்டிக் கேட்க, குழந்தை பயந்து அலறஅங்கு நின்றவர்கள் அவனைப் பிடித்து நையப் புடைத்து போலீஸ்தானத்திற் கொடுக்க அவர்கள் அவனைக்கொழும்புப்பைத்தியகார வைத்தியசாலைக்கு அனுப்பியிருக்கின்றனர். நிற்க,

கேகாலை டிஸ்திறிக்கில் இரு சந்நியாசிகளைப் பிடித்து அடித்துப் பிள்ளைகளைப் பிடிக்கவந்தாரென்று வழக்குத்தொடர நீதிபதி இருவரையும் நிரபராதியாகக் கண்டு விடுதலை செய்து அவர்களை அடித்தவர்களில் வழக்குத் தொடரும்படி உத்தரவு செய்தாரென அறியலானேன். அங்ஙனமெல்லாமிருக்கவும் இங்குள்ள நாட்டுப் புறத்தில் சிவசின்னமாகிய காவி வஸ்திரம் உருத்திராக்க மணிந்த சந்நியாசிகளைக் கண்டதே பிள்ளைகளைப் பிடிக்கவந்தாரெனறு பிடித்து அடித்துத் தொந்தரவுசெய்யத் தலைப்பட்டுக் கொண்டனர். இச்செய்தி குருநாக்கல் நாடெங்கும் காட்டுத்தீப்போல்பரவ காவிவஸ்திரந் தரித்த சந்நியாசிகளைக் கண்டவுடன் பிள்ளைகள் பயந்தோட அங்கு குழுமி நிற்பவர்கள் தம்பால் கூடி வழியிற் செல்லும் நிரபராதிகளான சந்நியாசிகளைப் பிடித்து அடித்துத் தொந்தரவுசெய்தும் போலீசிற் கொடுத்தும் வழக்குத் தொடர்ந்தும் பெருந் தொந்தரவுகள் செய்யத் தலைப்பட்டுக் கொண்டனர். உண்மைச் சிவனடியார்கள்தாமும் கதிர்காமம் சிவனடிபாதம் யாத்திரை செய்பவர்களும் அச்சங்கொள்ளவேண்டி இருக்கிறது. இன்று ஓர் சந்நியாசியை அடித்துப் போலீசர் வசம் கொடுத்தனர். ஆகையால் பத்திரிகாசிரியர்களும் சைவாபிமானிகளும் இவ்விஷயத்தை அகற்ற முன்வருவார்களாக.

இங்ஙனம்,
சமயாபிமானி.

குருநாக்கல்,
(10-9-25)

## அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து சம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

றாத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

ச. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(M. 37)

---

## ஹிஸ்டிரியா என்னும் மூர்ச்சைவியாதி நிவர்த்தியாயிற்று.

என்று திருவானைக்காவல் சீதாராமய்யரவர்கள் பின்வருமாறு சென்னை கேஸரி குடீரம் கம்பனியாருக்கு எழுதினார்.

4-வருஷகாலமாய் அடிக்கடி (பஹிஷ்டை காலத்தில் வரும் ஹிஸ்டிரியா) மூர்ச்சைவியாதியால் வெகு ஆபத்தாய்ப்படுத்திருந்த என் பாரியாளுக்கு உம்மிடமிருந்து தருவித்த "லோத்ராவி"னுப யோகத்தால் சம்பூரணகுண முண்டாயிற்று.

"கேஸரி குடீரம்"
ஆயுர்வேத ஔஷதசாலை,
எழும்பூர், மதராஸ்.

(Y. 35. A)

---

## இனும் காலண்டர் இனும்.

எங்களிடம் கட்டி வெள்ளியிலும் 1-ம் நெ. 2-ம் நெ. வெள்ளியிலும் மிச்சம் அப்புரவாக வேலைமுடித்த முரசுகுத்தி கெங்காதரக்கொடி கைகோர்வை, முகப்புக்கொடி, காஞ்சிஅரைஞாண்கொடி, கால்தண்டை, கொலுசு, வளைகளும் கடயம் சங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணமும், இமிடேசன் செகப்பு சம்மல் தோடு கடுக்கன் மோதிரங்கள் இன்னும் இதரவெள்ளி தங்க நகைகளும் பட்டுபருத்திமுதலிய ஜவுளித் தினுசுகளும் விலைகள் சகாயம். விலாசம் தெரிவித்தால் பிரைஸ்லிஸ்டு அனுப்புகிறோம். சுபம்.

தோ. வெ. சென்னிசெட்டி &சன்ஸ்
சராப்- ஜவுளி வியாபாரம்
குகை, சேலம்,
தென்-இந்தியா.

H. 41.)

---

## சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் நெய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியுங் கலந்த தினிசுகளும், தாரம்பூச்சரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுன்பேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது. விலாசம்தெரிவித்தால் பிரைஸ் லிஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:

கோ. ப. சி. அ. வேணுகோபால்செட்டியார்
அண்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் எஜண்டு,
குகை, சேலம். S I.

தந்தி விலாசம்:
வேணுகோபால்,
சேலம்.

(H. 32.

---

## விளம்பரம்.

இனும்! காலண்டர் இனும்!!

எங்கள் கம்பெனியில் கட்டி வெள்ளிச் சாமான்களும். நெ. 1-ம், நெ. 2-ம் வெள்ளியாலும் மிச்சம் அப்புரவாக வேலை செய்த முரசு குத்தி கெங்காதரக் கொடி, கைக் கோர்வை முகப்புக் கொடி, காஞ்சிக் கொடி, கால் தண்டை, செயின்கொலுசு, இன்னும் காலிற் போடும் சாமான்களும், மயிர்மாட்டி, கடயம், ஒட்டியாணம், மோதிரம், புதுச் சிகப்புக் கம்மல், தோடு, கடுக்கன், சிமை வயிரக்கப்பி சட்டங்கள், ஜவுளி பட்டும் பருத்தியும் கலந்த சேலை, சோமன், இன்னும் வேண்டிய சாமான்களும் இருக்கின்றன. தாங்கள் விலாசம் தெரிவித்தால் கிரயஜாபிதா அனுப்புகிறோம்.

ஈ. பளே செட்டி அன கோ.,
சுரூப் ஜவுளி வியாபாரம்,
குகை, சேலம்,
தென் இந்தியா.

(B 69.)

---

அநேக பரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.

25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ்அண்டு மருந்துக்கண் காக்ஷியில் பஸ்கிளாஸ் முதல்தர தேவநாஷதங்களைத்தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும் பெற்ற

உலகம் புகழ்வது




உள்ள நாளும் மறவாதது

சூலை, குஷ்டம், ரணம், மேகம் முதலிய சகல வியாதிக்குங் கைகண்டது

### பழனி, சி. எம். சாமி

# குரு தாம்ர பஸ்பம்.

முப்பூவினால் தருக்கற நீற்றியது; களிம்பற்றது; வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றுஞ்செய்யாதது; பத்தியமில்லை. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

பலனில்லாவிடில் பணந் திருப்பிக் கொடுக்கப்படும்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியந் தீரும். மறுமுறை வியாதி திரும்பி வராது. இது சகல வியாதிகளையும் வேரற நீக்கும் சக்தி வாய்ந்தது.

சூலை, குஷ்டம், திமிர், ரணம், மதமதப்பு, தடிப்புகள், பிரந்திகள், பத்துகள், கைகால் ரணங்கள், குன்மம், மேகம், டவுந்திரம், கண்டமாலை, சூலைநீர் முதலிய சகல கர்மவியாதிகளும் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கும்.

குறைநோய் சம்பந்த வியாதிகள், விரல்கள் அழுகிப்போயிருந்தாலும்சரி, அம்மட்டில் ஆறிவிடும். இது குஷ்டம், கருமேகம், வெண்மேகம், செம்மேகம் முதலியவைகளுக்கு மகா அருமையானது. இதுபோன்ற மருந்து எங்கும் கிடைப்பதரிது.

80 வேளை மருந்து ரூபா 40. 40 வேளை மருந்து ரூபா 20. 20 வேளை மருந்து ரூபா 10. ஏழைகளுக்குப் பாதி விலை. பிரபுக்களுக்கு விலை வேறு. வி. பி. சார்ஜ் பிரதியேகம்.

நற்சாட்சி.

தேகமெல்லாமிருந்த மேகப்பத்துகள் இருந்த இடந் தெரியாமல் மறைந்துவிட்டன. கைகால் விரல்களிலிருந்த அழுத மேக ரணங்கள் பூரா ஆறிவிட்டன. முகவசீகரமும் பசியும் உண்டாயிருக்கின்றன. K பழனியாண்டிப்பிள்ளை, செருத்துார், லால்குடி, திருச்சி.

தங்கள் தாமிரபஸ்பம் 64 வேளை சாப்பிடக் கொடுத்ததில் குஷ்டரோகம் குணமாயிற்று. சரீரத்திலுள்ள மேக வேர்கள் நீங்கி பாதத்தில்மட்டும் கொஞ்சம் இருக்கிறது. முகதேஜஸ் உண்டாயிருக்கிறது. தவிர வேறு ஒருவருக்கு சூலைநோய் (பித்த குன்மம்) 6 வேளையில் குணமாயிற்று. இன்னும் 80 வேளை மருந்து வி. பி. யில் அனுப்பவும்.

சி. பி நாராயணபிள்ளை, சப் போஸ்மாஸ்டர், சர்ச்சில் ரோட், ரங்கூன். 4-11-24.

## நிகரற்ற மன்மத கோலாகல குளிகை.

அபூர்வ சக்தி வாய்ந்தது!
புதியபலத்தைக்காட்டும்!
ஒருமுறை பரீக்ஷிக்கவும்!

ஆச்சரியகுணமுள்ளது!
போனபலத்தை மீட்கும்!
அதை இன்றே பார்க்கவும்.

இதற்கு நிகரான மருந்து புவியிலெங்குமில்லை. ஒரேகுளிகையில் பரீக்ஷிக்கலாம். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி முதலியவைகள் நீங்கி நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி உண்டாகும் வீரியக்கட்டும், இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வின் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

120 குளிகை ரூபா 10. 60 குளிகை ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை 2. வி. பி சார்ஜ் வேறு.

திருச்சி கா. இ. ம. இப்ராஹிம் 3-1-23-ல் எழுதுகிறார்:

தங்கள் மன்மத கோலாகல குளிகையைச் சாப்பிட்டதில் இரத்தத்தைச் சுத்திசெய்து நரம்புத் தளர்ச்சியை நீக்கி நல்ல பலத்தையும் வீரியத்தையும் கொடுத்து உற்சாகத்தையும் இன்பத்தையும் தருகிறது. இன்னும் 3 ரூபாய் குளிகை வி. பி யில் அனுப்பவும்

சித்த ஆயுள்வேத டாக்டர்,

**C. மலையப்பசாமிப்பிள்ளை,**
நித்தியானந்த மெடிக்கல் ஹால்,
பழனி.

(Q. 64 A.)

---

### தேக்கமரம்.

புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடிதொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 10 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம்வரையி லுள்ளன. நீண்ட மரங்கள் குறைவாயிருப்பதினால், எம்மிடம் வழக்கமாயெடுப்பவர்கள் தங்கள் ஆடர்களை ஏற்கனவே செய்துகொள்ளவேண்டியது.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு,

தந்திவிலாசம்
ஆ பி. வல்லுவெட்டித்துறை.

(H. 37.)

### "சேலம் பனியன்கள்."

உறுதியானது விலைசரசம்.
நாட்பட உழைக்கக்கூடியது,
வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.
தேவைக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ரூயல் நிட்டிங் பேக்டரி,
செவ்வாய்பேட்டை, சேலம்,
S. இந்தியா.

(H. 40.)

---

# அதிசிரேஷ்டமான தைலம்.


காரகண்டிப்பான மனுஷனோ ஸ்திரீயோ சரியென மதிக்கும்படியான அநேக முக்கிய சரக்குகள் சேர்ந்த தைலம்

### லிட்டில்ஸ் ஓரியன்றல் பாம்.

இதர தைலங்களைவிட இது ஏன் சிரேஷ்டம்?

1. நோவைக் குணமாக்கும் 12 திவ்விய சரக்குகள் சேர்ந்தது.
2. அவைகளின் சாரத்தை அது தன் திட—திராவ மூலகாரணத்திலடக்கி வைத்திருக்கிறது.
3. அதில் வீணாய்ப்போகும் தன்மையே கிடையாது. தினையளவு தைலம் பனையளவு குணத்தைத்தரும்.
4. அதில் அன்னியபொருள் சேர்ப்பில்லை.
5. அதில் மிருகக்கொழுப்பேயில்லை.
6. அது குணஞ்செய்யும் குணமுடையது.

3—ட—25.



(Y. 41 A.)

---

## சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து.

நளிர் (குலைப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்டர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்டர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது. மற்றும் வைத்தியர்களினால் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு மூன்று போத்தலை உபயோகிப்பதனால் முற்றாக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ரூபா 1 சதம் 50. இம் மருந்து கொழும்பு கார்ஜில்ஸ் (Cargills Ltd ) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறலாலது.

(Y 47 )

---

## புதிய தினுசுகள் சகாய விலைகள்

### நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனாரிஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னாடு, காஞ்சீபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய தினுசுகளில் சுத்தமானபட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO.

Y. 39).

---

## சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தசாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை றாத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைறாத்தலுக்கு ரூபா க0. கால் றாத்தலுக்கு ரூபா ரு தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பீ. சட்டம் இல்லாததினால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

---

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

---

Printed and Published by Pandit V. T. Sambandhan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna,